# புத்தளம் பிரதேச புலவர்கள்

146

டாக்டர் எம். எஸ். எம் அனஸ்

வெளியீடு

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு – 2002

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம் பிரதேச புலவர்கள்

டாக்டர் எம். எஸ். எம். அனஸ்

துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பற்றுறை அமைச்சு – கிழக்கு
அபிவிருத்தி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன்
2002. 10. 22, 23, 24 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடாத்திய
உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | புத்தளம் பிரதேச புலவர்கள் |
| ஆசிரியர் | : | டாக்டர் எம். எஸ். எம். அனஸ் |
| விடயம் | : | கவிதைத் தொகுப்பு |
| வெளியீடு | : | உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு – 2002<br>கொழும்பு – இலங்கை. |
| வெளியீட்டுத் திகதி | : | 15. 10. 2002 |
| உரிமை | : | முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| அட்டை வடிவமைப்பு | : | ஜெலீலா காதர் மொஹிடீன் – மருதமுனை |
| அச்சிட்டோர் | : | ஏ. ஜே. பிரின்ட்ஸ்<br>44, புகையிரத வீதி,<br>தெஹிவளை. |
| ISBN. No. | : | 955-8806-06 -04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் சமய விவகார அமைச்சு மாண்புமிகு அமைச்சர் றவூப் ஹக்கீம் அவர்களின் பணிப்பின்பேரில் இலங்கை இஸ்லாமிய ஆய்வத்தின் அனுசரணையுடன் நடத்தும் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடும் நூல்களில் இதுவும் ஒன்று.

புத்தளப் பிரதேசத்தில் அறியப்படாமல் இருந்த இலக்கியங்களையும் அவற்றை எழுதிய புலவர்களையும் தமிழுக்கு அறிமுகம் செய்யும் பொருட்டு டாக்டர் எம். எஸ். எம் அனஸ் அவர்கள் இந்நூலைத் தொகுத்துத் தந்துள்ளார்கள். அவர்களுக்கு இஸ்லாமியத் தமிழுலகம் நன்றியடையதாகும்.

THAJUL ATHEEB, KALABOOSHANAM
ISLAMIYA ILAKKIYAKKAVALER
S.A.R.M. SEYED HASSAN MOULANA, J.P.
MEMBER OF MEDIATION BOARD
NINTAVUR-12

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
(தலைவர் மாநாட்டு அமைப்புக்குழு)

**அஷ்ரப் சிஹாப்தீன்**
(மாநாட்டுப் பொதுச் செயலாளர்)

**தாஸிம் அகமது**
(மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி உரை

2002ம் ஆண்டு செப்டம்பர் 07ம் திகதி, புத்தளம், மஸ்ஜித் வீதி, தண்ணீர்தாங்கி முற்றவெளியில் இரவு 11மணிக்கு, உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டினரால் வெளியிடப்படவுள்ள இலக்கிய நூல்களில் புத்தளம் புலவர்கள் பற்றிய இலக்கிய நூல் ஒன்றை வெளியிடுவது தொடர்பாக நாமும் முயற்சித்தால் என்ன என்று இஸட்.எ.ஸன்ஹீர் ஆரம்பித்த உரையாடலின் விளைவுதான் இந்நூல்.

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு அமைப்புக்குழுத் தலைவர் டாக்டர். ஜின்னாஹ். ஷரிபுத்தீன் அவர்களுடன் தொடர்பு கொண்ட போது கூடியவிரைவில் ஆக்கத்தை சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதற்காக அவருக்கும் மாநாட்டு நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவிப்பது கடமையாகும்.

மாநாட்டு பிரசுர வேலைகள் முடிவடையும் நேரத்திலேயே இந்நூலாக்க ஆலோசனை எனக்குத்தரப்பட்டது. இப்பணியில் மிக விரைவாகச் செயல்பட வேண்டி இருந்தது. ஏனெனில், புத்தளம் பிரதேசத்துக்குரிய சில புலவர்கள், சில பாடல்கள் பற்றி தகவல்கள் திரட்டப்படவேண்டியிருந்ததால் அதற்கான முயற்சிகளை முடிவுசெய்தோம். அதன்படி புத்தளம் மக்கள் மன்ற உறுப்பினர் களான ஆர்.முஹ்ஸியும் இசட். எ. றஸ்மியும் தகவல்களை தேடிசெல்வதற்கு தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கினர்.

மறுநாள் எம்.எம் லெப்பைப்புலவரின் (அலிஉதுமான்) ஆக்கங்களைத் தேடி புளிச்சாக்குளம் சென்றோம். அங்கு சென்ற போது அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ. முத்தலிப், ஜே.பி. ஓய்வுபெற்ற ஆசிரியர் சித்தீக், புலவர் அலிஉதுமானின் மகள் அவரது பேரப்பிள்ளைகள் ஆகியோர் எமது தேடலுக்கு பூரண ஒத்துழைப்பை அவர்களுக்கு எனது நன்றிகள்.

கரைத்தீவு சேக்கமரைக்கார் புலவரின் பாடல்களை இஸட். எ. ஸன்ஹீர் ஏற்கனவே என்வசம் தந்திருந்ததை இங்கு முக்கியமாக குறிப்பிடவேண்டும். அத்துடன் சேக்கமரைக்காரின் மகன் அஸீஸ் சேக்கமரைக்காரும் தந்தைபற்றிய தகவல்களை யும் இரு பாடல்களையும் உடனடியாக எமக்கு தந்துதவினார். அவருக்கு எனது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டற் குழி உஸனார் லெப்பை அவர்களின் பாடல்கள் 1988ம் ஆண்டு கண்டற்குழியில் களிகம்பு பாடல்களை சேகரிக்கும் போது பெற்றுக்கொண்டதாகும். இப்பாடல்களையும் புலவர் அப்துல் மஜீதின் கோலாட்டப்பாடல்களையும் எனக்கு பாடி அளித்த கண்டற் குழி களிகம்பு அண்ணாவி கா. அ.சாலிபு அவர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாக வேண்டும். அப்துல் மஜீத் புலவரின் தகவல்களை தந்த திகழி கௌஸ்தீன் ஜே.பி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அச்சு பிரதிகளை சரிப்பார்ப்பதில் முழுநேரம் செயல்பட்ட எனது மாணவரும் உதவி விரிவுரையாளருமான எம்.ஐ.எம்.தௌபீக் அவர்களுக்கும் எனது நன்றிகள். குறுகிய காலத்தில் கணனி படுத்தித் தந்த உடபேராதனை, செல்வி. தமயந்தி ஜெகநாதனுக்கும் எனது நன்றிகள்.

1978 லிருந்து தொடர்ச்சியாக நடைபெற்ற பாடல்கள் சேகரிப்புக்களை முறையாக பாதுகாத்து வந்ததோடு தகுந்த நேரத்தில் அவற்றை தேர்ந்தெடுத்துத் தந்துதவிய எனது மனைவி முப்லிஹாவுக்கும் எனது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

புத்தளம் பிரதேசத்தின் புலவர்கள் பற்றிய ஆய்வு 1978ல் ஆரம்பமாகி அது இன்றும் தொடர்கிறது. இதற்கிடையில் வரகவி செய்கு அலாவுத்தீன் (1991) செய்கு இஸ்மாயில் புலவர் ஒரு பண்பாட்டு பார்வை (1994) என்ற இரு வெளிவந்தன இவை நூல்கள் இப்பிரதேசத்தின் புலவர்களையும், பாடல்களையும் இப்பிரதேசத்தின் பண்பாட்டையும் பதிவு செய்தன. எனினும் இதே புலவர்கள் பாடிய இன்னும் பல பாடல்கள் எமது கைகளுக்கு கிடைக்கவில்லை. சில கிராமங்களில் பாடல்கள் பாடி வந்த சிலரின் பெயர்கள் புதிதாக கவனத்திற்கு வந்தது சேர்ந்தன.

இந்நூலில் பேசப்பட்டுள்ள புலவர்கள் இயற்றிய பாடல் களின் மொத்த தொகை ஆயிரத்திற்கும் அதிகமானவை. புலவர் செய்கு அலாவுத்தீன் இயற்றிய பாடல்கள் மட்டும் ஆயிரத்திற்கும் மேல் என்று மதிப்பிட முடியும். செய்கு அலாவுத்தீன் உட்பட ஏனைய புலவர்களின் பாடல்களிலும் அனேகமானவை கால வெள்ளத்திற்கு இரையாகி விட்டன. அல்லது எங்காவது எழுதப்பட்ட நிலையில் அல்லது வேறுவடிவத்தில் மறைவாக உள்ளன.

வாய்மொழி இலக்கியங்களாக மட்டும் அன்றி சில புலவர்கள் பல்வேறு தலைப்புக்களில் தமது பாடல்களை கையெழுத்துப் பிரதிகளாகவும் கோர்வை செய்து வைத்திருந்தனர். அவையும் இன்று கிடைக்கும் நிலையில் இல்லை. அலிஉதுமான் புலவரினால் வெளியிடப்பட்ட **கீர்த்தி மஞ்சரி** இசைப்பாடல் நூலும் இதுவரை எமது கைகளுக்கு கிடைக்க வில்லை.

இந்நூலில் உள்ள பெரும்பாலன பாடல்கள் வாய் மொழி வடிவத்தில் இருந்து எழுத்து வடிவத்திற்கு மாற்றப்பட்டவையாகும். அத்தோடு, இடத்திற்கு இடம் சிறுமாற்றங்களோடு பாடப்பட்டு வருபவை, என்பதனால் எழுத்து வடிவமாற்றத்தின் போது சில திரிபுகளுக்கோ அல்லது மயக்கங்களுக்கோ இடமேற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அத்தோடு இப்பாடல்களை இயற்றியோரில் சிலர் இலக்கணம் அறியாதவர்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். செய்கு அலாவுத்தீன் புலவர் இலக்கணம் தெரிந்தவராக இருந்தும் அவர் அதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. இப்பாடல்கள் அனைத்துமே மக்களின் அன்றாட உணர்வுகளையும் கலாச்சார வாழ்வையும் பிரதிப்பலிப்பவை. இன்னொரு வகையில் இப்பாடல்கள் மக்களிடம் செல்வதற்காக இயற்றப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கண புலவர்கள் சீறாவுக்கு பொருள் சொல்வதிலும் வெண்பாக்களுக்கு கடினநடையில் விளக்கமளிப்பதிலும் ஈடுப் பட்டிருந்த காலத்தில் புலவர் செய்கு அலாவுத்தீன், செய்கு இஸ்மாயில் போன்றவர்கள் மக்கள் கலைகளில் நாட்டம் கொண்டு சாதாரண மக்களுக்காக பாடத்துணிந்தனர். இப்பிரதேசத்தில் செய்கு இஸ்மாயில் புலவர் ஆரம்பித்த இம்முயற்சி செய்குஅலாவுத்தீன் புலவரிடத்தில் சாதாரண மக்களின் பிரச்சினைகளை எளிய மொழியில் பாடுவதாக அதன் உச்ச நிலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

செய்கு அலாவுத்தீனின் பாடல்கள் கூடு, கொடி, மற்றும் தர்ஹாக்களை மற்றும் விவரிக்க வில்லை. ஊர் வரலாறு, பாடசாலை முன்னேற்றம், கல்வி நிலை, விலையேற்றம், வறுமை, பஞ்சம், தேர்தல் வாக்குறுதிகள், வாக்குரிமை போன்ற நவீனயுக மனிதர்கள் எதிர்நோக்கிய புதிய பிரச்சினைகளை செய்கு அலாவுத்தீன் பழைய சிந்துகளின் உட்பொருளாக்கினார். அதாவது சிந்துகளை செய்கு அலாவுத்தீன் மக்கள் பிரச்சினைகளை பாடுவதற்குரிய வடிவமாக்கினார். ''மாகாண ஓட்டுக்கு பள்ளியை கட்டுவாராம்,'' ''கலியுகமே பொல்லாக் கலியுகமே'' என்ற பாடல்கள் களிகம்பு ஆட்டத்திற்காக பாடப்பட்டவை. ஆனால், தவறணை தவற வேண்டும். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் மீறப்பட்டதை யும் மோசடிக்காரர்களின் எல்லையற்ற அநீதிகளையும் குடிப்பழகத்திற்கு அடிமையாகிக்கிடப்போரையும் அவை சாடின.

புத்தளம் பிரதேசத்திற்குள்ளும் அல்லது அதற்கு அப்பாலும் மக்கள் கவிஞன் என்ற தகுதியை, இருபதாம் நூற்றாண்டின் உதயத்தில் பெறுவதற்கு, மற்றெந்த புலவரையும் விட செய்கு அலாவுத்தீனின் பாடல்கள் தான் கோரி நிற்கின்றன. மேலும் செய்கு அலாவுதீனும் செய்கு இஸ்மாயிலும், அலிஉதுமானும் சேக்கமரைக் காரும் புத்தளம் பிரதேசமக்களின் வாழ்வையும பண்பாட்டையும் பன்நூறாண்டுகள் மக்களைத் தாங்கி நின்ற இம்மண்ணினது பெருமைகளையும் தமது பாடல் கலையினால் அடுத்த தலைமுறை கென விட்டு சென்றுள்ளனர். அவற்றை ஆவணப்படுத்துவதும் பாதுகாப்பதும் இன்றைய தலைமுறையின் கடமையாகும்.

**-எம்.எஸ்.எம். அனஸ்-**

**C. 72 பல்கலைகழக**
**வீட்டு தொகுதி,**
**மீவதுர. பேராதனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

புத்தளம் பிராந்தியம் அல்லது பிரதேசம் என்பது இங்கு புத்தள மாவட்டத்தைக் குறிக்கவில்லை. புத்தள மாவட்டம் பல தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய பெரிய பிரதேசம். 1980களில் இளம் முஸ்லிம் பட்டதாரிகள் சங்கம் தனது சேவைகளுக்காக புத்தளம் தொகுதியைப்பெரும்பாலும் புத்தளம் பிராந்தியம் என அடையாளப் படுத்தியது. அதேபகுதிகளைதான் பிராந்தியம் என்ற சொல் குறிக்கிறது.

இங்கு குறிப்பிடப்படும் புலவர்கள் அனைவரும் தொகுதி என்ற வரையறைக்குட்பட்ட பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள். கல்பிட்டி, கண்டற்குழி, குறிஞ்சிப்பிட்டி, தேளி, புளிச்சாக்குளம், கரைத்தீவு, பள்ளிவாசல்துறை ஆகிய ஊர்களைச் சேர்ந்த புலவர்களும் அவர்களது பாடல்களும் இதில் இடம்பெறுகின்றன. இக்கிராமங்கள் அனைத்தும் புத்தளம் பிரதேச முஸ்லிம் மக்களின் பூர்வீகக் கிராமங்களாகும்.

ஆயிரம் வருடத்தொன்மையுடைய முஸ்லிம் குடியேற்ற வரலாற்றை புத்தளம் தொகுதிக் கிராமங்கள் சில கொண்டுள்ளன. அறபு தேசத்தொடர்பும் தமிழ் நாட்டு முஸ்லிம்களின் தொடர்பும் புத்தள பிரதேசத்திற்கு ஒரு தனித்துவமான இஸ்லாமிய கலாசார மரபை வளர்க்க உதவியுள்ளது. அறபுமொழி, அறபுத் தமிழ், தமிழ் என்ற மொழித்தொடர்புகளும் அறபு, இஸ்லாம், தமிழ் என்ற இன்னொரு தொடர்பும் இம்மண்ணை செழுமை உள்ளதாய் ஆக்கி உள்ளமைக்கு காட்டக்கூடிய இலக்கிய சான்றுகள் சில, இந்நூலில் பாடல்களாகப் பதிவாகி உள்ளன.

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முன் அரைப்பாதி வரையில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த புலவர்களின் பாடல்கள் இதில் அடங்கி உள்ளன. குறிப்பாக இப்பாடல்கள் இக்காலப்பகுதிக்குரிய முஸ்லீம்களின் கலாச்சார மற்றும் சமூக சமய உணர்வுகள் பற்றிய மதிப்பீட்டினை செய்வதற்கோ அல்லது அவர்களின் வாழ்வியலையும் அபிலாஷைகளையும் அறிந்து கொள்வதற்கோ உரிய ஆவணங்கள் அரிதாக உள்ள நிலையில், இப்பாடல்கள் தரக்கூடிய சமூகவியல் தரவுகளின் முக்கியத்துவத்தை நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முன் அரைப் பாதிவரை புத்தளம் பிரதேசமும் தர்ஹா கலாசாரத்தின் செல்வாக்கை பெற்றிருந்த பிரதேசங்களில் ஒன்றாகும். இதில் உள்ள பாடல்கள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கலாசாரத்தின் பல்வேறு அம்சங்களையும் ஒலிமார்கள் பெயரிலான பக்தி மரபையும் விதந்து கூறியிருப்பது கவிதைகள் காலத்தை பிரதிபலிக்கும் கருவிகள் என்ற கருத்துக்கு ஆதரவானதாக மட்டும் தான் கொள்ளப்படவேண்டும்.

இப்பாடல்கள் தர்ஹாக்களின் புகழை மட்டும் பாடவில்லை அக்கால முஸ்லிம்கள் அவுலியாக்களின் பக்தியில் மட்டும் மூழ்கி கிடக்கவும் இல்லை. இதற்கும் இப்பாடல்களின் ஆதாரங்கள் உள்ளன. நபிகள் நாயகத்தின் மீதான பாசத்தின் ஊடாக இஸ்லாத்தை தலைமேற் கொள்வதற்கும் குர்ஆனையும் இறை நேசத்தையும் தமது முடிவான பாதைகளாக வகுத்து கொள்வதற்கும் அவர்களிடம் இருந்த உறுதியான ஏகத்துவ இலட்சியங்களையும் இப்பாடல்கள் பிரதிப்பலிப்பதை காணமுடியும். குர்ஆனின் போதனை தொழுகை, ஸகாத் தௌஹீத் உட்பட அடிப்படை சமய இலட்சியங் களில் தமக்குள்ள ஒருமைபாட்டு உணர்வையும் பற்றினையும் இக்கவிஞர்கள் ஒவ்வொருவரும் பாடி வைத்திருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

கவிதையாத்தல் என்பது காலத்தின் அழுத்தத்திற்கும் அன்றைய கலாச்சார தேவைகளுக்கும் தான் பொதுவாக சேவை செய்கிறது. எமது மூதாதையரின் கவிதைகளும் இதற்கு விதி விலக்கல்ல. இப்பாடல்களின் பெறுமதிகளில் ஒன்று, அவை கடந்து சென்ற காலத்தின் சிறுபரிணாமத்தையாவது நம் அறிவுக்குள் காட்சிப்படுத்தும் அவற்றின் தனித்தன்மை என்று கூறவேண்டும்.

செய்யுள் இலக்கணம் கடந்த, இசை மற்றும் நாட்டார் இசை வடிவத்திற்குரியதும் மக்கள் வழங்கும் மொழியினைக் கொண்டதுமான" இப்பிரதேசப் பாடல்கள் அவற்றின் வடிவத்தினாலும் உள்ளடக்கத்தினாலும் தமக்கென்ற தனித்துவத்தைப் பெற்றுள்ளன. மன்னார் மாவட்ட முஸ்லிம் பாடல்களிலும் இத்தகைய பண்புகள் இருப்பதை அப்பாடல்களில் அனுபவம் உள்ளோர் அறிவர். இப்பிரதேசப்புலவர்கள் எடுத்துக் கொண்ட இசைவடிவங்களில் வழிநடைச் சிந்து, கப்பல் சிந்து, கும்மி, தெம்மாங்கு, கண்ணிகள், கீர்த்தனைகள் போன்றவை சிறப்பிடத்தை பெற்றுள்ளன.

தமது ஊரின் பெருமைகளையும் இயற்கை அழகுகளையும் சமய உணர்வுகளையும் இவ்வெளிய இசை வடிவங்களின் உடாக இப்புலவர்கள் பாடினர். இங்குள்ள வாவிகள், நீருற்றுக்கள், பள்ளிவாசல்கள், மக்கள் கூடும் இடங்கள், சந்தைகள், தர்ஹாக்கள், பறவைகள், விலங்குகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தரின் உறவுகள், ஒழுக்க மாண்புகள் அனைத்தும் இவ்விசைப்பாடல்களினால் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட காட்சிகளும், குறிப்பிட்ட பதங்களும் வரிவடிவங்களும் இப்பாடல்களில் பல புலவர்களால் சில சந்தர்ப்பங்களில் திரும்ப திரும்ப கையாளப்பட்டிருந்தாலும் அவை பெற்றுள்ள சொல்நயமும், இசை நயமும் அப்பாடல்களை புதிய பாடல்களாகவே ஆக்கி விடுகின்றன.

இப்பாடல்கள் படித்து ரசிப்பதற்கு என எழுதப்பட்டவை யல்ல. விழாக்காலங்களுக்காகவும் பெரியோரை போற்றுவதற்காகவும் குறிப்பாக களிகம்பு ஆட்டத்தில் இசைப்பதற்காகவும் பாடப்பட்டவை. இப்பாடல்களுக்கான இருப்பு மக்களின் குரல்களாகவே அமைந் திருந்தன. அதனால் சொற்றிரிபுகளுக்கும் வழக்குமொழி பயன் பாட்டிற்கும் இவை அடிக்கடி இயல்பாகவே உள்ளாகின. எனினும் இப்பாடல்களின் மொத்த அமைப்பிலோ சொல்நயத்திலோ எந்த வேறுபாடுகளும் ஏற்படவில்லை. இப்பாடல்களை படித்துப் பார்ப்பதைவிட அதற்குரிய இசையுடன் கலந்து பார்ப்பதிலேயே இப்பாடல்களின் உண்மையான *தரிசனம் தங்கியுள்ளது.* தாளமும் லயமும் இப்பாடல்களின் சொல்லமைப்புகளில் இரத்த நாளமாய் ஓடி வியாபித்திருப்பதை களிகம்பு ஆட்டத்துடன் அவை பாடப்படும் போது மட்டுமே அறியமுடியும்.

மௌனித்து கிடக்கும் கிராமத்து இரவுகளை, கம்பொலி களும் சிந்துப் பாடல்களின் கூட்டிசையும் ஒன்று கலந்து இசைமயமாக்கும் அழகு, அரைநூற்றாண்டிற்கு முன்னரே அஸ்த மனமாகிவிட்டது. ஆயினும், வெறும் வாசிப்பிலும் அப்பாடல்களில் உள்ளடங்கி உள்ள மௌன ராகம் இதயத்தில் எழுப்பும் இன்னிசையை அக்கலாச்சாரத்திற்குட்பட்டவர்களால் நன்குணர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நன்றி உரை | iv |
| முன்னுரை | vi |
| பொருளடக்கம் | xi |
| அறிமுகம் | viii |

அத்தியாயங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஷெய்கு இஸ்மாயில் புலவர் | - 01 |
| 2. | வரகவி செய்கு அலாவுத்தீன் | - 15 |
| 3. | கவி. எம். எம். லெப்பை (அலி உதுமான்) | - 28 |
| 4. | கவி சேக்கமரைக்கார் | - 37 |
| 5. | நா. முஹம்மது அசனார் மரைக்கார் | - 58 |
| 6. | மீ. ஹபீபு முஹம்மதுப்புலவர் | - 59 |
| 7. | அப்துல் மஜீதுப்புலவர் | - 67 |
| 8. | உசனார் லெப்பை | - 71 |
| 9. | கவி. சித்தீக் | - 74 |
| 10. | அ. முஹம்மது இப்றாகிம் | - 76 |
| | குறிப்புக்கள் | - 78 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெய்கு இஸ்மாயில் புலவர்

புத்தளம் பிரதேசத்தில் வாழ்ந்த முக்கியமான புலவர்களில் ஷெய்கு இஸ்மாயில் ஒருவராவார். வரகவி செய்குஅலாவுதீனின் பாடல்களைபோல் இவருடைய பாடல்களும் ஏட்டில் எழுதப் படாதவை. வாய்மொழியாக வழங்கி வருபவை.

புத்தளம் பிரதேசத்தில், கல்பிட்டிக்கு அருகேயுள்ள குறிஞ்சிப் பிட்டி என்ற சிறுகிராமத்தில் ஷெய்கு இஸ்மாயில் பிறந்தார். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 19ம் நூற்றாண்டின் முதற்பத்தில் அவர் பிறந்திருக்கலாம். ஷெய்கு இஸ்மாயிலின் தந்தையின் பெயர் அசனா மரைக்கார். அவர் ஒரு செல்வந்தர். இப்புலவருக்கு தெள்ளப்பா என்ற ஒரு பட்டப் பெயரும் உண்டு. மக்கள் இவரை தெள்ளப்பா என்றழைத்து வந்துள்ளனர். புலவரின் தந்தை அசனா மரைக்கார் தனது மகனுக்கு கீழைக்கரையை சேர்ந்த ஆலிம்களை கொண்டு மார்க்க கல்வியில் தேர்ச்சி பெறச்செய்தார். ஒரு ஆலிமாவதற்கு ஒருவர் ஓதவேண்டிய கிதாபுகள் அனைத்தையும் அவர்களிடம் புலவர் கற்றுக் கொண்டார். அவர் பள்ளிவாசல் கதீப்பாகவும் கடமையாற்றினார்.

இப்புலவரின் ஆற்றல் பல்துறைப்பட்டது. அவருக்கு நல்ல மார்க்க அறிவிருந்தது. தமிழ் இலக்கிய, இலக்கண துறைகளிலும் அவருக்கு சிறந்த தேர்ச்சி இருந்தது. அவர் களிகம்பு அண்ணாவி யும், நாடக நடிகரும் பாடகரும் ஆவார். இசைக்கருவிகளையும் அவர் இசைக்க கற்றிந்தார். நாட்டு வைத்தியராகவும் தேர்ச்சி பெற்றிருந்தார். சிலப்பதிகார கதையை கோவலன் கதை என்ற பெயரில் இசை தழுவிய நாடகமாக்கி மேடையேற்றியுள்ளார். பல தோத்திரங்களை யும் மந்திரங்களையும் அறபு மொழியிலும் தமிழிலும் அவர் இயற்றியுள்ளார். புலவரின் உறவினரான அப்துல் காசிம் பரியாரி புலவரின் தோத்திரங்களை பயன்படுத்தி பல கைவைத்தியங்களையும் மாந்திரீகங்களையும் செய்துவந்துள்ளார்.

ஷெய்கு இஸ்மாயிலின் பெரும்பான்மையான பாடல்கள் இசை பாடல்கள் ஆகும். அவற்றிலும் பல நாட்டார் பாடல் வகையை சார்ந்தவை. குறிப்பாக, முஸ்லிம்களிடையே பிரபல்யம் பெற்று விளங்கிய கப்பற்சிந்து, வழிநடைசிந்து, கும்மி, தெம்மாங்கு போன்ற இசை வடிவங்களில் அவர் பல பாடல்களை உருவாக்கினார். இவற்றுள் பல இன்றுவரை கற்பிட்டி பிரதேச கோலாட்டப்பாடல்களில் பயன்படுத்தப்பட்டு வருவதை காணலாம். அவரது எதிராளி ஒருவன் வீசிய கூரிய மன்டாலுக்கு அவர் இரையாகாமல் இருந்திருந்தால் அப்புலவரிடமிருந்து இலக்கிய உலகம் இன்னும் பல அரிய படைப்புக்களை பெற்றிருக்கும். அவர் மரணிக்கும் போது அவரது வயது நாற்பத்தி எட்டு இருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பல் பாட்டு

(பல்லவி)

லாஇலாஹ இல்லல்லா - இல்லல்லாஹ்
முகம்மதுர்ற சூலுல்லாஹ் - சூலுல்லாஹ்

(அனுபல்லவி)

ஆதி ஒளிவாலுதித்தோர் - இல்லல்லாஹ்
ஆலந்நபி தனை உகந்தோர் - இல்லல்லாஹ்
நீதியுள்ள ஒலிமார்கள் - இல்லல்லாஹ்
நிறைந்த மலர் தாள்பணிந்து - இல்லல்லாஹ்

ஜோதி மறை நீதிபுகழ் பகுதாதில் வாழும்
சுல்தான் முகையத்தீன் தோன்று துணையாக
ஜாதி மறை நீதி புகழ் சகலோரும் ஒன்றாய்
சங்கை நெறி கப்பலொலி சாகிபு துணையாக

வாரிபுகழ் குறிஞ்சிமா நகர்தன்னில் தீனோர்
வரிசையுடன் மவ்லூது ஓதி ஒன்றாக
மதி சந்திர வடிவான வங்கம் சமைக்க
வரிசை புகழ் எங்கும் நிறை வல்லவனே காப்பு

(லாஇ)

சங்கையுள்ள கப்பலுக்கு - இல்லல்லாஹ்
சடைந்த வங்கு சந்தனமரம் - இல்லல்லாஹ்
மங்காத மணிபவளம் - இல்லல்லாஹ்
வைரத்தினால் ஏராவாம் - இல்லல்லாஹ்

சிங்கார மணிமுத்து வாரிகள் பரப்பி
செம்பு வைரத்தினால் பூதாறும் வாத்து
தங்காமல் ஓடுகிற சாயம் நிரப்பி
சரியான பித்தளை சங்கிலி தொடுத்து
தங்கமொடு வெள்ளித் தகட்டினால் கப்பி
சரியான வெண்கலச் சுக்கான் இணைத்து
திங்களொளிவான தீனோர்கள் கூடி
சீரான கப்பல் உண்டாக்கினா ரய்யா

(லாஇ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியுள்ள கப்பலுக்கு - இல்லல்லாஹ்
வேர் பளிங்கு பாய்மரமாம் - இல்லல்லாஹ்
சக்தியுள்ள தளமரமும் - இல்லல்லாஹ்
சாதிலிங்கக் காவியாவாம் - இல்லல்லாஹ்

சித்திர ஒளிவான கமர் பந்து தூக்கி
சீராணி முத்தினால் சிங்கம் உண்டாக்கி
முத்து ஒளிவான நங்கூரம் உண்டாக்கி
முறை பன்னீர் கஸ்தூரி வாசமும் காட்டி
சமுத்திரம் பார்த்தொரு நாளுமுன்னோக்கி
சரிகிடாய் வெட்டி நல் கந்தூரியாக்கி
காத்திமுலன்பியா பாத்திஹா ஓதி
கடல்மீது கப்பல் இறக்கினாரய்யா
(லாஇ)

நற்றவங்கள் பெற்றுவந்தோர் - இல்லல்லாஹ்
நபிகிருபை தாள்பணிந்தோர் - இல்லல்லாஹ்
ஒத்தப்பாலை தனை உகந்தோர் - இல்லல்லாஹ்
ஒலிபாதம் தினமுகந்தோர் - இல்லல்லாஹ்

விஸ்தாரமான ஊர் கல்பிட்டி வாழும்
வேந்தர் ஒலி ஆபத்து சாஹிபைப் போற்றி
சுத்தாங்கமாகவே தீனோர்கள் கூடி
சொல் நளினமாயொரு பாத்திஹா ஓதி
குத்தமணுகாமலே தீபமே காட்டி
கூரான தூண்டா மணி விளக்கேற்றி
எத்தலம் போற்றும் நபி இறசூலை வாழ்த்தி
ஏற்றமுடன் நல்சரக் கேற்றினாரய்யா (லாஇ)

ஜோட்டு முத்து கல்நகையும் - இல்லல்லாஹ்
சொகுசான ஆணிமுத்தும் - இல்லல்லாஹ்
கூட்டு வர்க்கமான பச்சை - இல்லல்லாஹ்
குங்குமப்பூ நிறைந்த பட்டும் - இல்லல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டில் அடங்காத சூரியகாந்தி
வளமான கிண்கினிப் பட்டுகளும் ஏற்றி
தொட்டால் மழுங்காத தும்பைப்பூ வெள்ளை
தொகையான மாதுளம் பூ வர்ணப்பட்டும்
வட்டமதி போல் வைடூரியக் கல்லும் - வடிவான
மதயானை தாங்கி வரும் குஞ்சரிக் கொம்பும்
திட்டமாய் ரத்தினக் கல் நாணயத்தால்
சீரான கப்பல் நிறைத்தார்கள் ஐயா
(லாஇ)

சிந்தை நிறை பக்தியுள்ளோர் - இல்லல்லாஹ்
திறமதிகப் பல முடையோர் - இல்லல்லாஹ்
வந்த கொண்டல் தெரிந்துரைக்கும் - இல்லல்லாஹ்
வரிசை நபி தீனுகந்தோர் - இல்லல்லாஹ்

சொந்தக் கிளாசுகள் தொண்ணூற்றியாறு
சூதனாம் தண்டையல் மாலினும் கூடி
விந்தை செறி வேதநூல் சாஸ்திரக்காரர்
வேந்தர் அசனார் மரைக்காயர் முதலாளி
சந்திரன் போல சகலோரும் ஒன்றாகி
தண்ணீர் அரிசி தீன்சாமான்கள் ஏற்றி
சந்தேகம் இல்லாமல் பீரங்கி தீர்த்து
சரியான பாய்விரித் தோடினாரய்யா
(லாஇ)

சீரான குறிஞ்சி நகர் - இல்லல்லாஹ்
செல்வமுள்ள தேசம்விட்டு - இல்லல்லாஹ்
நேரான கல்பிட்டியூர் - இல்லல்லாஹ்
நிறைவான தலம் கடந்து - இல்லல்லாஹ்

கூரான பார்முகம் குதிரைமலை சேர்ந்து
குணமான கிச்சடி ஆக்கிப் பகிர்ந்து
நேரான புனல்வாவி ஆற்றில் புகுந்து
நெறியான கோட்டை மன்னாரைக் கடந்து
தோதான யாழ்ப்பாணத் துறைமுகம் சேர்ந்து
சூதான வெங்கலப் பீரங்கி தீர்த்து
வீரனாம் தண்டையல் முதலாளி சொல்ல
விலை பெற்ற முத்துக்கள் இறக்கினாரையா
(லாஇ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன விலை சரக்கிறக்கி - இல்லல்லாஹ்
துறையரசர் வீடு புக்கி - இல்லல்லாஹ்
மன்னவர்கள் மனையிறங்க - இல்லல்லாஹ்
வைரம் விற்றுப் பணம் வாங்கி - இல்லல்லாஹ்

பன்னீரும் பலபல சரக்குகள் ஏற்றி
பாங்கான யாழ்ப்பாணம் விட்டுப் பிரிந்து
உன்னிர்தமான மன்னாரைக் கடந்து
ஒளிவான குதிரைமலை சாஹிபைப் போற்றி
சொன்ன மொழி தவறாது குறிஞ்சி மாநகர்
துறை சேர்ந்து தீனோர்கள் வாழ்ந்திருந்தார்கள்
சொன்னேன் இக்கவி தன்னை செய்கு இஸ்மாயில்
சுகம் பெற்று எந்நாளும் வாழ்ந்திடவே வாழி
(லாஇ)

## அலங்கிர்தக் கொடி

அலங்கிர்தக் கொடி
அழகைப் பாரடி - எங்கள்
ஆபத்து சாஹிபு
(அலங்)

அலங்கிர்தக் கொடி அழகைப்பாரடி
அலங்காரப் பச்சை அழகுதுலங்க
இலங்கையாகிய கல்பிட்டி நன்னகர்
இறை ஆதிஒலி ஆபத்து சாஹிபு (அலங்)
வயிரப்பகளம் வடிவு துலங்கிட
வளமான காவியா வளமும்
குங்குமக் குடமும் இலங்கிட
வைரமாக ஒளிவு துலங்கிட
உயரேறுங்கப்பிகள்
உச்சிர்த வச்சிர்த பட்சி போல் இலங்கிட

மயிலே பொற்கொடி மரமுமிலங்கிட
வசந்த சந்தன வாடை கமழ்ந்திட
குயிலேபொற்கொடி சலங்கை கூவிட
கொடி முத்தான குமுஸ்தமிலங்கிட (அலங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தன வாடை சவ்வாது கமழ்ந்திடவே
சபர் மாத்தையில் தீனவர்
சங்கையாய் இரு செங்கையுயர்த்திடவே
பந்தம் பகவத்தி கந்தங் கமழ்ந்திடவே
பாரினில் தீனவர் பாத்திஹா ஓதிப்பின்
பாதம் பணிந்திடவே

கந்தங் கமழ் வாசமும்
காரணமாகிய நாயகரே எந்நாளும்
சிந்தை மகிழ்ந்து ஜெயம் தருவீரெங்கள்
ஷேகான ஒலி ஆபத்து சாஹிபு (அலங்)

ஷெய்குமார்கள் திக்ர் ஓசையாம்
சீரான வாங்கா சின்ன மேளம்
கிண்ணற பாஷையாம்
பாலும் தேனும் பழமும் சக்கரையாம்
பண்பான சீனி பாத்திஹா ஓதி
பகரும் பாதையாம்

தொகுதியான முறடு பம்பை
துடினராக முரசு முழங்க
பகுதி பகுதியாக இஸ்மாயில்
படித்திடத் தவில் அடித்திட (அலங்)

## சீனியப்பா திருச்சிந்து

(பல்லவி)

சீனியப்பாதிருக் காட்சியைக் காணலாம்
சிந்தைமகிழ்ந்து வா கண்ணே
மனத் தெம்பாய் நடந்து வா பெண்ணே (சீனி)

(அனுபல்லவி)

ஆணிப் பொன்னான அருள் நிலை தங்கியே
ஆகாத பொட்டை இபுலீசை நீக்கியே
தேனின்பமான கலிமாவை ஓதியே
தீபரமாகிய கோபத்தை நீக்கியே (சீனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சரணங்கள்)

சோதிக்கதிபதி ஆவிபடைத்திடும்
தூயவனைத் தொழுதேற்றி
மறைஓதி இந்தை அழைத்த
முகம்மது உண்மை
மலர்ப்பதம் போற்றி - இன்னும்
நீதி துலங்கும் உமறுதுமான்
அபூபக்கர் அலி
பதம் போற்றி - இன்னும்
வாவிக்கதிபதியான முகிய்யதீன்
வாசமலர்ப்பதம்
போற்றி - இன்னும்

ஆதிக்குகந்த பெரியோரைப் போற்றியே
அன்பான பாத்திஹா இன்பமாய் ஓதியே
காதரொலிக்கொரு பாத்திஹா ஓதியே
கப்பலொலி பாதம் கல்பினில் எண்ணியே

பத்தியே - மனம் நத்தியே பீபி
பாத்திமா நாயகி பாலனைப் போற்றியே (சீனி)

செங்கர மேந்திய நெய்னார் முஹம்மது
ஷெய்கான் சாஹிபை உகந்து - இன்னும்
மங்கையர் போற்றும் குறிஞ்சி மாநன்னகர்
வாவி துறை விட்டு எழும்பி
அருள் பொங்கும் புகழ் ஒத்தப்பாலை
அவுலியா பொற்பதம் போற்றிப் பின் எழுந்து - இன்னும்
மங்கள மேவிய கற்பிட்டி நன்னகர்
வாவித் துறைமுகம் சேர்ந்து - ஒரு
சங்கையான புது ஓடத்தில் ஏறியே
சஞ்சல மேவிய துறையையும் நீங்கியே
புங்கமான மணற்குண்டு தீவையும் நீங்கியே
பொங்கிடும் ஆற்றையும் காற்றையும் நீங்கியே

கூனுதே - உடல் நாணுதே - வெற்றி
குதிரைமலைக் கொடியும் தெரியுதே (சீனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திர மேவிய சாஹிபைப் போற்றியே
பாலுடன் கிச்சடி ஆக்கி - இன்னும்
பாத்திஹா ஓதிப்பின் நேத்தியைப் பகிர்ந்து
பாதமதை விட்டு நீங்கி - இன்னும்
சித்திர முத்துச் சிலாவத்துறைமுகம்
சிந்து கரைதனில் இறங்கி - இன்னும்
வெற்றியாய் நடந்து நாற்பது முழ
கபுறடியைக் கண்டு ஒதுங்கி - இன்னும்
தோத்திரம் செய்து நேத்தியைக் களித்து
சோபனமாய் ஒரு தோணிவந்தடுத்து
காத்த முலன்பியா காசிமை நினைத்து
காத்தெழும்பக் கரைவிட்டுப் பாய் தொடுத்து

சாடுதே - மனம் நாடுதே - இன்னும்
சக்கரை சாகிபு தலமும் தெரியதே (சீனி)

உத்தமராகிய கப்பமுசாகிபு
உண்மையான மலர்ப்பதம் தோய்ந்து விட்டு
சுத்தாங்கமாகவே வங்கத்திலேறியே
சோதிக் குறவயல் கடந்து - இன்னும்
குத்துமணுகாத மூலப்பயலெனும்
கூரான பார்முகம் உணர்ந்து - இன்னும்
சற்றும் மனது தயங்கிடாமலே
தனுஷ்கோடி தீர்த்தக்கரை சேர்ந்து - அதில்
செட்டி சமுத்திரம் ராமேஸ்வரமும்
கோவில்புறமும் நல்ல குந்துகால் பள்ளியும்
மட்டில்லாத ஆறுகளும் தாவி ஓடும்
பாமன் ஆறுடன் மோருசா மின்னுதே

மின்னுதே - நதி உன்னுதே - இன்னும்
வெற்றியாய்த் தோணித்துறையும் தெரியுதே (சீனி)

சந்நிதி சத்திரம் வாவிக்கபுறடி
சங்கை மண்டபத்தைக் கண்டுவிட்டு
விந்தை அழகான மரைக்கார் பட்டணம்
வீதியிருப்பது கண்டு நின்றும்
மந்திர மேவிய மன்னார் தீவின்
ஆலவிருட்சம் பள்ளி சென்று - நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழ்ந்து சிரசைப் பணிந்து பின்
சீரான பாத்திஹா நவுட்டு - இன்னும்
சங்கையாய் வேதாந்துறையிலிறங்கியே
தாழ்மையாய் ஆதி இறையை வணங்கியே
மங்கையே நித்தம் வணங்கியே
வேதாள வாகன கூடமும் மாடமும் நீங்கியே

கண்ணே - நட பெண்ணே - ஒலிகாரண
சேகு முகப்பையும் பார் முன்னே (சீனி)

அஞ்சி வணங்கியே காரண சாகிபு
அன்பான பாதத்தை நாடி - மனம்
கெஞ்சி நடந்திடப் பச்சைப் புள்ளை
அம்மன் உண்மைத் தலம் தேடி - உங்கள்
கஞ்சமலர்ப்பதம் கண்டு வணங்கியே
கல்லுக்குமிச்சானைத் தேடி - உங்கள்
தஞ்சமென்றே புதுப் பள்ளியுடன்
அப்துல் காதிர் தலந்தனில் ஏறி - இன்னும்
வஞ்சமில்லாமல் கெஞ்சி வணங்கியே
வாவிக்கரையும் கபுறையும் நீங்கியே
கெஞ்சியிருப்போரும் கூடி முன் ஏகியே
கோமான் முகம்மதை மனதினில் எண்ணியே

தேடுதே - மனம் நாடுதே - இன்னும்
கீரிக் குடாப்பள்ளி பாராடி முன்னமே (சீனி)

உத்தமராகிய சீனியப்பா ஒலி
உத்தமமான ஒரு நாட்டம்
மனம் வைத்துப் பின் தோத்திரம் செய்து
நடந்தாக்கா வந்திடுமே பனந்தோட்டம் - அதில்
சித்திரமாகிய வெற்றிக் கொடிகளும்
தீனோர்கள் நித்தமும் கூட்டம் - உங்கள்
நாட்டமாகவே ஒலி பாதம் பணியவே
நாடி வந்த ஜனக்கூட்டம் - அதை
விட்டுக் கடந்திட கப்பல்துறைமுகம்
வெள்ளைக்கொடிகள் அதிகம் தெரியுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுலெக்கில்லாமல் வாசம் மணக்குது
வாகான பச்சைக் கொடியும் பறக்குது
அஞ்சுதே - மனம் ஓஞ்சுதே - இன்னும்
அத்தறு சந்தன வாசம் மணக்குதே (சீனி)

மல்லிகை முல்லை இருவாட்சி ஷண்பகம்
றோசா மணக்குது பெண்ணே - இன்னும்
அல்லி செந்தாமரை பாரசரகுடை
மல்லி வாசமிகுறது முன்னே - இன்னும்
சொல்லில் அதிவடிவான ஆசார வாசலைப்
பாரடி முன்னே - நிதி
செல்வம் பொருந்தும் பள்ளியிலே
கொடி தீபம் இலங்குது கண்ணே - இன்னும்
ஆலையும் தங்கும் இலுப்பை இவற்றையும்
வடிவான வேம்பு புளியமரங்களும்
சோலையான இத்திபூவரசு
ஜெகஜோதிகளாக அரச மரந்தன்னில்
இருந்தே - மனம் - குளிர்ந்தே
சருபத் துடன்லட்டு முட்டாசுகள் அருந்துவோம் (சீனி)

## குழல் கதிஜா

களலுகந்தோர் குழல் கதிஜா
கருணையிறவல் மஹ்முது நபியே

ஹக்க னருள் திக்கிர் நிலை
மக்க நகர்க் கதிபதி குவைலிது மகள் (களல்)

தளமதினா(ர)த்திசயமே
ஷரி அத்தின் ஒளிவான மரகதமே
நலமுறு தீன் நவநீதமே
நறை கமழும் குறைஷிக் குலதீபமே

நத்துல் யக்கீன் சிபாத்துல் யக்கீன்
நல்மரந்தன்னில் மஞ்ஞையான சக்கின்
வெற்றி வாகையில் கதக்கின்
விரதங்கனி புறுக்கான் முத்தலக்கீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தந்தரு விசும்புக்கதிகாரமே
ஆதிமதுகபுகள் நீள்கரமே
மஹு"முதெனும் பித்தி கைவாலயமே
வரிசையரம்பையர் போற்றும் வச்சிர்தமே

அதிநிதியே சுவனத்ததிபதியே
அங்கர புங்கமே மங்குல குடைநபியே (களல்)

சித்திரப்பாண் சுடரணுகா திரையிருள்
சாய்கையிலாத் திருநபியே
எத்திசை முத்தவத் திறை நிதியே
இறையருள் கற்பக நவமணியே

சித்திரமலர் விண்ணில் தீண்டாவி னேசரே
சிறந்தகனிபுறுக்கான் நிறைந்த உல்லாசரே
முற்றிய அதிபச்சை முறையலங்காரரே
மோட்சந்தனை யுகந்த மொழி விசுவாசரே

நற்பகளம் வைரம் உறைந்திடவே
நகைகளினித்தில் லிலங்கிடவே
நற்பொருளாஞ்சனை ஒளிவிடவே
நறைகமழ் ஜிபுரீல் ஒளிவரவே

ஆதி முன்பாகவே கபுசுடனேகியே
அறுசினில் ரகசியம் பகருமுஹம்மதுவே (களல்)

மடல் செறி குடகரை வாசகரே
வரிசை அப்துல்லாதிருப் பாலகரே
கடல் புவிக்கரை ஒளிக்கதிகாரரே
ககன விண்ணோர் போற்றும் மகராஜரே

வினோதம் வழங்கும் குணபதி சீலரே
விவேக மறைநெறிவிளங்கும் பொற்பாதரே
மண்ணோர் வணங்கும் திருமலர்ப்பாதரே
வரிசை ஆமினார் பெறுமதியலங்காரரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடகரனே குறைஷிக் குலவிளக்கே
கோமானருள்புரியும் தவமுமக்கே
கடகந்தனில் பவனிவரும் விளக்கே
கதந்தந் தாளுமுங்கள் அடியனுக்கே

மதியழைத்தோர் சுனையில் நதியழைத்தோர்
மறைநெறி தவநிலை மக்க முஹம்மதுவே (களல்)

மல்லிகை ஷண்பகம் முல்லைமலர் தொழுகும்
மக்கமதின்னகர்க் கதிகாரரே
குலமகளாயிஷா துணை மறை நாதரே
சுவனபதிக் கிவர்துரை விஸ் தாங்கரே

சாளையமகற்றிடும் புலவர் முன்னே
தமிழ் ஞான சாஸ்திரம் வகையறியேன்
ஏழை அசனாமரைக்கார் புத்திரனே
இரங்கி ரெட்சியும் தீனுக்கதிகாரரே

புவிக்கரசே லோகநபிக்கரசே
பொறுதிவைத்திசுமாயில் பிழைபொறுத்தருளும் (களல்)

## பச்சை மரகதமானவர்

பல்லவி

சித்திரமே எந்தன் ரெத்தின மாமயிலே
ஷெய்கு அலாவுத்தீன் சாகிபு
சீர்பாதம் கண்டு தரிசனஞ் செய்யலாம் (சித்)

அனுபல்லவி

இத்தலம் பள்ளிவாசல்துறை ஊர்தனில்
இன்பமாய் வந்து இறையருள் பெற்றவர்
நித்திலம் பச்சை மரகதமானவர்
நீதரவுலியா பாதத்தை நாடியே (சித்)

ஆதி தன்னை முகம்மது தன்னையுமே - நாங்கள்
அன்பாகப் போற்றி
அல்ஹம்தை ஓதித்தான் ஆண்டவனைப் புகழ்ந்து
நாரியர் போற்றும் குறிஞ்சிமா நன்னகரை விட்டு
நாட்டமாக நம்மள் ராஜ பெருவழி
தன்னிலே தான் கடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியமே புதுப்பள்ளியும் சாகிபு வாசலின்
பேரிலே பாத்திஹா ஓதியே
வாவிக்கரையும் வழியையும் நீங்கியே
வரிசை அவுலியா பாதத்தை நாடியே (சித்)

அன்னக்குயிலே அவர்பாதமே நினைத்து - நாங்கள்
அன்பாக நடந்து
அருமையூர் சம்மாட்டிவாடி தன்னில் வந்து
மன்னரப்பா சாய்பு மாமலரைப் பணிந்து - நல்ல
வாழையும் சோலையும் வரிசையாய்
வாவிக் குளமும் கண்டு நடந்து
வர்ணக் குயிலே வரிசை அவுலியா
வாசமும் வீசுது
வஞ்சியே நாசினில் நிண்ணய முள்ளவர்
பாதத்தை நாடி
நெறியுடன் போய் பிரியமுடன் காண்போம் (சித்)

பள்ளி தெரியுது பாருங்கொடி மரமும் - அதில்
பண்பாக நின்று பறக்குது
பூலாக் கொடி அழகும்
வள்ளல் முஹம்மது தீனவர் கூட்டங்களும்
வடிவாகவே நிற்கிறார்
வாத்திய மேளம் முழங்குது பாரும் பெண்ணே
அள்ளிக் குடிக்கும் கிணறு திலாவும்
அன்பாய் மதுரமரமிது பாரும்
பள்ளியைச் சுற்றிலும் காட்டும் அழகும்
பண்பாயிருக்குது பாரும் (சித்)

சித்திரமாகவே சுற்றிலும் கட்டும்படி - இங்கு
செய்தவர் புதிரர் சீமான்
மகுது நெய்னாமரைக்காரடி
இத்தலம் பள்ளிவாசல்துறை ஊர்தனிலே
இங்கிருக்கும் மரைக்கார்மார்
இன்ப மதியூகர் இவர் போலொருவரில்லை.

கத்தோ நிகுமத்து நித்தமுண்டாமே
கனியே இவர் கோடி செல்வமுண்டாகுமே
பக்தனின்னடியேன் பேரிலே
நித்தமும் கண்பாரும் இன்பதுரையே (சித்)

-ஓ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரகவி செய்கு அலாவுத்தீன்

வரகவி செய்கு அலாவுத்தீன் ஒரு அந்தகர். குழந்தையாக இருக்கும் போது அவரது கண்களில் ஏற்பட்ட நோய் அவரது பார்வையைப் படிப்படியாகப் பறித்துக் கொண்டது. அந்தகராகக் கையில் ஊன்று கோலுடன் அல்லது தமது மகன ஹமீது ஹுஸைனின் கரங்களின் துணையுடன் தான் தமது வாழ்நாளில் பெரும்பகுதியை அவர் கழித்தார்.

செய்கு அலாவுத்தீன் இளமைக்காலத்திலேயே பாடத் தொடங்கி விட்டார். வயல் வரப்புக்களிலும் காடு கரம்பைகளிலும் சுயமாகப் பாடி திரிந்தார். பார்வைக் குறைபாடு இருந்தாலும் இளவயதில் துணிச்சலுடன் தனியாகத் திரிந்தார். பாடசாலை சென்று படிக்க வில்லை. 1880ல் செய்கு அலாவுத்தீன், தந்தை நாகூரானுக்கும் தாய் சேகு உம்மாவுக்கும் மகனாகப் பிறந்தார். தந்தை மதவாக்குத்தைச் சேர்ந்தவர். தந்தை நாகூரானின் உறவினர்கள் பலர் இன்றும் மதவாக்குளத்தில் வாழ்கின்றனர்.

அந்தகரான புலவரால் தாமாக எழுதபடிக்க முடியாதிருந் தாலும் மற்றவர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டார். நாடகப் பாடல்களையும், சினிமாப்பாடல்களையும் அவர் ஆர்வத்துடன் கேட்டார். அப்போது கூத்துக்கள், டிராமா மோடி இசை நாடகங்கள் என்பன புத்தளம் பிரதேசங்களில் அடிக்கடி அரங்களிப்புச் செய்யப்பட்டான. இந்திய கொம்பனி நாடகக் குழுவினர் சிலர் அவ்வப்போது புத்தளத்தில் சில நாடகங்களைத் தொடர்ச்சியாக மேடையேற்றி வந்தனர். அத்துடன் சீறாப் படித்தல், இலக்கிய நூல்களுக்கு உரை அல்லது பொருள் சொல்லுதல், பதம் படித்தல், என்பன இப்பிரதேசத்தை ஆதிக்கம் செய்தன. களிகம்பு ஆட்டம் மக்கள் பார்த்துக் களிக்கும் பிரதான ஆட்டக் கலையாக மிக உயர்ந்த இடத்திலிருந்தது. பொதுவாக எல்லா ஊர்களிலுமே களிகம்புக் குழுக்கள் இருந்தன. சாதாரணமாக ஒரு குழு அக்காலத்தில் குறைந்தது நூறு பாடல்களுக்கு மேல் பாடி களிகம்படிப்பதற்குத் தயாராக இருந்தது. போட்டிகளில் ஒரு குழு பாடிய பாடலை பாடலை இன்னொரு குழு பாடுவதில்லை என்ற இலக்கியக்கலைப் போட்டியும் இருந்ததால் களிகம்பிற்காக மட்டும் எண்ணற்ற பாடல்கள் இப்பிரதேசத்தில் உருவாகின.

இப்பிரதேசத்தின் இத்தகைய சூழல் தான் அந்தகரான செய்கு அலாவுத்தீனை அருட்கவியாக்கியது. கல்வி கற்காமலே பாடல் இயற்றியதால் மக்கள் செய்கு அலாவுத்தீனை வரகவி, சரஸ்வதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர், கடாட்சக்கவி என அவரை அருட்கவியாக்கிப் பார்த்தனர். புலவர் கேள்வி மூலமாகப் இயல்பாக பெற்றவற்றுடன் திருப்தி யடையவில்லை. இலக்கிய, இலக்கண நூல்களையும் மற்றவர்கள் உதவியுடன் படிக்கக்கேட்டுத் தமது இலக்கியத் திறனை வளர்த்துக் கொண்டார்.

செய்கு அலாவுத்தீன் எளிய இசைப்பாடல்களையே அதிகம் பாடினார். அதே நேரத்தில் அவர் வெண்பாக்களையும், செய்யுள்களையும் இயற்றியுள்ளார். மன்னார், புத்தளம், கல்பிட்டி மதவாக்குளம் உட்பட பல்கிராமங்களில் சீறாப்படித்துப் பொருள் சொல்வதில் தலைமை ஆசானாக அவர் விளங்கினார். தமிழ் நாட்டிலிருந்து வந்த சில புலவர்களுடன் இலக்கியவாதுக்கள் செய்து தமது இலக்கிய அறிவை வெளிப்படுத்தினார். அட்டவதானம்பாடும் கலையையும் அவர் கற்றிருந்தார். சீறாப் புராணம், இராஜ நாயகம், போன்ற காப்பியங்களை அவர் துறை போகக்கற்றிருந்தார். பல நாடகங்களை அவர் மேடை யேற்றினார். அவற்றுள் சில அவர் எழுதித் தயாரித்தவையாகும். அவர் எழுதித் தயாரித்த நாடகங்களில் ஜின்ராஜன் சரித்திரமும் ஒன்று.

களிகம்பு ஆட்டத்திற்காக அவர் எண்ணற்றப்பாடல்களை உருவாக்கினார். சபைகளில் பாடுவதற்காக பல பதங்களை யும் கீர்த்தனங்களையும் பாடி வழங்கினார். வழிநடைச்சிந்து செய்கலாவுத்தீனின் பிரபலமான இசை வடிவமாகும். இவ்வடி வத்தில் முப்பதுக்கும் மேற்பட்டபாடல்களை அவர் பாடியுள்ளனர். தவிர, யானைக்காதல், முனாஜாத்துக்கள், மெய்ஞ்ஞான நூல், சீறாவின் மானுக்குபிணை நின்ற படலத்துக்கான நயஉரை என்பன அவரால் இயற்றப்பட்டு கையெழுத்துபிரதிகளாக அவரது வீட்டில் இருந்தன. அவரது மரணத்தின் பின் அவரது கையெழுத்துப் பிரதிகளும் அவரது வீட்டில் அவரால் சேர்க்கப்பட்டிருந்த இஸ்லாமிய இலக்கிய, தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களும் காணாமல் போய் விட்டன.

அவர் இயற்றிய நவண்ணக்கீர்த்தனை என்ற இசைப்பாடல் பிரசுரம் 1928ல் வெளியிடப்பட்டது. இதில் புலவரின் பத்துப் பாடல்கள் இடம் பெற்றிருந்தன. கல்வி அதிகாரி அ.வி. மயில்வாகன புலவர் ஆற்றுப்படை எனும் நூலில் செய்கலாத்தீனின் வாழ்க்கை வரலாற்றையும் பிரசுரிக்கப்படாத பதினைந்து பாடல்களையும் வெளியிட்டார். இது 1946ல் வெளிவந்தது. எம்.எஸ்.எம். அனஸ், வரகவி செய்கு அலாவுத்தீன் பற்றி எழுதிய விரிவான ஆய்வு வரகவி செய்கு அலாவுத்தீன் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் இலங்கை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் 1991ல் நூலாக வெளியிடப்பட்டது. இதில் புலவரது சுமார்130 கவிதைகள் இடம் பெற்றிருந்தன.

வரகவி செய்கு அலாவுத்தீன் எனும் நூல் 1992ல் கரைத்தீவில் நடந்தப்பட்ட பிராந்திய முஸ்லிம் கலாசார விழாவில் அப்போதைய முஸ்லிம் கலாசார இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம் அஸ்வர் அவர்களினால் வெளியட்டு வைக்கப்பட்டது. செய்கு அலாவுத்தீன் புலவரின் வாழ்க்கையை வைத்து நாடக கலைஞர் எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பாரினால் எழுதப்பட்ட கல்பொளி கொண்ட கவி என்ற நாடகமும் அவ்விழாவில் அரங்களிப்புச் செய்யப்பட்டது.

புலவர் செய்கு அலாவுத்தீன் காட்டுக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு 1938ல் காலமானார்.

## மோகம்

பல்லவி

மோக வெறியி னாலே
மோசம் வரும் கேளினி மேல்
மோகத்தினாலுலகில்
பின்னடைந்தோர் கோடியுண்டே

(தொகையறா)

ஆகமுணராதவன் அறிவிலிகளென்பதை
அறிந்தேன் யான் உனையின்று - (மோக)

துஸ்டா உன் கெட்ட காலம்
தூர நில்லு ஊரைச் சொல்லு
கஷ்ட முனக்கினி மேல்
கன்னி யென்னால் துயருறு பிணி

வேதாந்த நுட்ப ஞானம்
விளங்கிடாத தொழும்பன் நீ
மதார் மரைக்காரன்பன்
மவுல் செய்கலாவுதீன் பால் (மோக)

## தேர்தல் வாக்குறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண ஓட்டுக்கு பள்ளியைக் கட்டுவாராம்
முகம்மது இப்றாகீம் நெயினா மரைக்கார்

ஓகோகோ ஏமாற்றி ஓட்டை எடுத்ததும்
ஒன்றபல் பட்டத்தை மெல்லுக்கு வைத்ததும்
ஆகாகா பாக்கியம் நல்ல சலாக்கியம்
அம்பலம் தனிலே நல்லசொல் யோக்கியம்

சொல்லுக்கு நல்ல அரிச்சந்திரன் என்று
சொல்லவோ இந்த சீமான் பெருமையை
சொர்ணமிடும் தர்ம கர்ணன் என்னிறடவோ - இந்த
வையந்தனிலே வில்லுக்கு நல்ல
விஜயன் என்றிடவோ!
கலிகாலத்திலே இந்த வீம்புகள் பேசும்
மகானைப்போல கண்டிடவோ
கல்லுக்குள் ரத்தினமே மதிப்பானது
காசிக்கு ஈனா சேனா மூனா வீடது

மெல்லுக்கு வாக்குச் சீட்டு பிரண்டது
மேன்மையும் கீழ்மையும் சொல் நிறைவேற்றினார்

வாக்கறியாதவர் வையகத்தில் இவராம்
நாங்கள் கண்டு மகிழ்ந்திட வணங்கிட
பள்ளியைக் கட்டத் துணிபவராம்
நாளை யெங்கும் கியாமத்து நோக்கம் தெரிந்து
வணங்க அழைப்பதுவாம்.

தீர்க்க முடன் சொந்த காடுவெட்டி
மரம் தீவிரமாக அறுத்து முடித்தபின்
ஏற்கும்படி பள்ளி கட்டி முடிப்பாராம்
ஏமாற்றுச் சொல்லியே
சாமார்த்தியப் பொய்யன்
கம்பு கால் ரெம்ப விலை இந்த
காலத்திலாம்
இந்தச் சீமான் மொழிவது
காடு வெட்டிமரம் தன்னை
எடுப்பதுவாம்
இந்த புத்திக் கிணையுண்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பின பேருக்கு மொழிந்திடச்
செப்புவாராம்
இதை யோசித்துப் பார்த்தால்
நாளை பின்னை இல்லை என்பதற்கிடமாம்

வம்பு மொழி என்று
சொல்லித் தகாத பொய்
வாக்களியா மொழி சொல்வாரே சீமான்
அம்புவியில் கணவான்கள் கண்டு மகிழ்ந்திடும்
ஆகிய சேலகாவுத்தீன் பாடினவை (மாகாண)

## கலியுகச் சிந்து

கலியுக் கொடும் வினையே தமமைச் சுற்றிக்
காசினியிலிக் கவிதை
சொல்வேனினியே (கலி)

மெலிவுறும் பவவினையே கலியுக
மேதினிக்கவிதை சொல்வேனினியே

அண்ணனுக்குத்தம்பிபகையாம் - கலியுக
அக்காளுக்குதங்கையவள் மக்களும் பகை
எண்ணனுக்கு எஜமான் பகை கலியுக
ஏழைகளை மீளவரும் மேலவர் பகை (கலி)
வந்தவர்க்கு ஊரவரச்சம் - கலியுக
வாத்தியாயர்பிள்ளை கட்குமிச்சமுமச்சம்
தந்தையர் தம்மக்களுக்கச்சம் கலியுக
தங்கமுடன் பொன்கள்போகச் செம்பதே மிச்சம் (கலி)

பெண்கள் சிலராண்கள்குணமாம் - கலியுக
பேடிள்சொல் மிகுந்தத்தத்துவத்தினமாம்
ஆண்கள் சிலர் பெண்கள் குணமாம் கலியுக
அறிஞர் முதியோரெல்லா மாக்களினமாம் (கலி)

உதவிக்குப்பதவியில்லை - கலியுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்பமிட்டபேர்களுக்கோர் நற்பதியில்லை
மூதேவிக்குச்சீதேவிநிலை கலியுக
மூர்க்கருக்குத்துக்கமில்லை யோக்கியமில்லை (கலி)

சாதிகெட்டோர் மேலோரினமாம் - கலியுக
சண்டிவானெல்லா மிகுந்த விண்டிவான்களாம்
நீதியற்றோரை, நாடிச்செல்வானாம் கலியுக
நித்தமும் பிரட்டுறுட்டும் சுத்தவான்களாம் (கலி)

வேசியெல்லா மெத்திப்போச்சு கலியுக
வேந்தர் நடுநீதியெல்லாம் செத்துப்போச்சு
தாசியுமூர்சுத்தலாச்சு கலியுக
சாத்திரமும் சோதிடமும் பொச்சுப்போச்சு (கலி)

நல்லவரையேசவே வரும் கலியுக
நட்டமிட்டிலொப்பிதற்கு மேன்மையே வரும்.
பொல்லவர்க்கு மேன்மையே வரும் கலியுக
பொருந்தும் செய்கலாவுத்தீன் கவிதையே வரும் (கலி)

## கருணை றகூல்

பல்லவி

பொங்கும் செல்வம் நாளும் வாழும்
பொருந்தும் மதினாமாநகர் சிங்காரம்

அனுபல்லவி

எங்கும் துலங்க ஓங்கும்- கருணை
யாறாசூலே காரும் வேளை

சரணம்

வெட்டும் கரத்தைப் பொருத்தும் கோவே
விரும்பிப் பணிந்தேன் கிருபை புரியும்
துட்டர்ஒடுங்கத் திடந்தந்தாளும்
தீன் தீன் துலங்கக் கெஞ்சிப் பணிந்தேன்

மூமீன் தனத்தில் உயர்ந்த நிலமை
முறைமை யாகுதே அருமை துரையே
ஆமினாவின் பாலாலே பா
சமைக்கும் செய்கலாவுதீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிபரே

பல்லவி

மகிபர் தொழும் சீமானே
மனம் போலுதவும் கோமானே

அனுபல்லவி

பகிரங்கமா ஈமானே பதிதோறும் முகியித்தீனே
அஞ்சும் நெஞ்சைப்பாத்து
அருள் செய்யும்நாளும் சேர்த்து
பஞ்ச மாயை தீர்த்து படி மீதென் முகம்பார்த்து
செகம் புரக்கும் மூதாக்களால் மதிக்கும்
பட்சமாயுள்ளகந்தீர்க்கும் படிமீதிலென் விதிக்கும்
புவியேழையா மெத்தீனோன் புலம்பும் வழி நற்தீனோன்
கவிசெய்கலாவுதீனோன் கழல் சேரும் நல்எத்தினோன்.

## வள்ளல் நபி

பல்லவி

மஹ்மூதே நீரே காரும் கோவே
மண்ணின் மீதிலே எனதுள்ளம் மண்போலே

அனுபல்லவி

பகை வராத வழியில் பாதுகாருமே
இப்போது வாருமே
மனதாசை நேச மோகமாற
வில்லையோ? நிதம் கூறவில்லையோ?
சரிகம, பதநிஸா, சநிதபமா
தேவா தினமா

தினம் தராத பாதமே தீவினையோ - இது
மூவினையோ
சரிகம, பதநிஸா, ஸநிதபமா
தேவா தினமா
விதியிதுவோ எவையோ
விண்ணோர் தொழுஞ் செம்மலே தாராதர வள்ளலே
துதிபாடி தேடி நாடி யோடி செய்குஅலாவுதீன்
தமிழ் பா மொழியத்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுமுறையோ இறையே தாதா யாஸீமே
திருவேதா காஸீமே
மஹ்றமுதே நீரே காரும் கோவே

## கல்வி முழக்கம்

பாஷா விருத்திச் சங்கம் முன்னிலோங்கி வாழ்கவே
பாலர் நாளுமோதும் நீதியறிவு பெருகவே
கூசிடாது நாவின் வலிமை பேசி வருகவே
குருவின் கருணை தவறாது பெருகி வருகவே
பண்டை நீதி கொண்டு ஓதும் உபந்நியாசமே
பழக்க ஒழுக்க வழக்கம் பெருகி வரும் நேசமே
நீதிக் கேற்ற போதனைக்கிணங்கு நூற்களே
நீடு தேடிக் கண்டு மொழியும் மாணவர்களே
திரை கடல் பெருகும் வாறாய் கல்வி முழங்கவே
சிறியோர் பெரியோர் எவரும் புகழ் நீதி விளங்கவே
நாட்கு நாள் வருக வருக விருத்தியாகவே
நடு நந்நீதியகத்திற்றிரண்டு பிரசங்கிக்கவே
சாகர முடுத்த பூவிலங்கை நாட்டினின்
சங்க மோங்க கற்பிட்டி மாநகர் வீட்டின்
செவ்விய சிறப்புறைந்த சகல பேர்களும்
ஜெய ஜெயன் செய்கலாவுதீன் கவிபெறும்
அன்புடன் மனமுவந்த பாடசாலையே
அமைத்து நடத்தும் சுவாமி எம் குண சேகரரே
ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் ஆள்கை வாழ்க வாழ்கவே
அதிக நற்புகழுயர்ந்து வாழ்க வாழ்கவே.

## புத்தளம் தேர்தல்

(தொகையறா)

கர துறையுயர்ந்திலங்கும் திலங்கும்
கருணை வாழ் ஜமாலுத்தீனும்
நன்னிய எவர்களாலும் இடரிவர்க்கு
இல்லை கண்டோம்
மரபு நன்மையுற ஜலாலுத்தீன் மரைக்காயர் - நன்றே
உயர்ந்தே
முஸ்லிம் சகோதரர்கள் இதர முதியவர்காள்
அசிலோடுதவிடுங்காள் ஜலாலுதீன் முன்வரவே-
(முஸ்லிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசம் செய்யும் பிறர் எவரும்
முன்னடையா வண்ணமே
ஆசையாக ஜலாலுத்தீன் மரைக்காயர்
வருக முன்னமே
யூடீஸ்கதிகாரமே பெறச் செய்வீர்களே
ஓடி எவரும் இதற்குழைப்பீர்களே

நன்மையாக ஜலாலுத்தீன் மரைக்காயர்
செய்த நன்றியை
உண்மையாகக் கண்ணில் கண்டோம்
உலகமறிதல் வேண்டியே
யார்க்கும் கடமையிதே
மக்கள் அறிவீர்களே
ஏற்கும் கவி மொழிந்தேன் செய்கலாவுதீனே
(முஸ்லிம்)

## தோஷம் அகல்க

தருனீதே சரணணி தருனீதே - செஞ்
சரணம் தருனீதே

தீனோர் புகழும் ஆலநபியே
தருனீதே
பாலனின் துயரகற்றி
பட்சமென் மேலிருத்தி
காலமுழுதும் களித்தே வீணனை
ஆழு மித்ததி ஆலநபியே (தரு)

தேசிகர் துதிக்கவே
ஜெகமதித்திட ஆளும்
செய்யதுன் அன்பியாகவே
பாச வினை தீர்க்கவே
பாவி எந்தினை நோர்கினீர்
பராபரன் திருத்தூதரே
சாலி கென்னும்
முத்திய வாழ்க்கை நன்னும்
முகமலர்ச்சியாய் அருளுமித்ததி
முகம்மதிறசூலிரங்கியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டன் சேகுலாவுதீன்
தொல்வினை போக்கிய தின்
தோசமகல பேசும் பயலின்
சீசனாகவே

செய்கலாவுத்தீன் புலவர் தமது நண்பரான புத்தளம் நகரைச் சேர்ந்த செ. முஹம்மது சாலிகு என்பவருக்கு அவருக்கு எதிராகப் போடப்பட்டிருந்த வழக்குகளிலிருந்து அவர் மீட்சி பெற வாழ்த்தியளித்த பாடல்.

## தவறணை தவறுக

பல்லவி

தவறணை தவற வேணும் - சாராயம் விற்கும்
தவறணை தவற வேணும் - முகியத்தீனே

அனுபல்லவி

தீய மதுவே தீன் வழிக்கு மாற்றமாகுதே
திருப்பிவிட நோக்கம் வேணுமே
பாவமுடன் கோள் களவு பஞ்சமா வினையகற்றி
தீபரமாய் ஓங்கவேண்டும் தீன் தீதிலா முகியத்தீனே

சரணம்

தேன் பொழி கரைத்தீவு தன்னில்
செய்யும ரும்பும் செத்திறந்து போக வேணுமோ
மான் மதங் கமழும் நபி மன்னர் மகளின் வழி
கோனிலம் தங்கும் எங்கள் குத்பே யாமுகியதீனே
(தவறணை)

வெறிமிகுதம் உண்டிடிலோ வேற்று மாந்தர் போல்
வெட்கம் ரோஷம் விட்டிடுவர்
மறிபிடித்த காளைகள் போல் மாகுணத்தை
மாற்றிடுவர் காணக்கருத்தோ
நற்கலை மறந்த சில பண்பற்ற சாதியெலாம்
பிரியமாம் சாராயத்தில் பிரித்திடும் முகியதீனே
(தவறணை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலை வற்றவைக்க வில்லையா
கப்பல் எழுப்பிக் கலியாணம் செய்விக்கலையா
திடர் மலை நடுங்கலையா
செத்த மையித்தைத் திரும்ப எழுப்பலையா
படர் புகழ் தழைக்க தன்சொல்
பாடினான் செய்கலாவுத்தீன்
அடரும் வெற்றி கடையற்று
அகற்றும் யா முகியத்தீனே

(தவறணை)

## கட்சிப்பகை

அநீதி செய்த வம்பரின் கூட்டம்
அடியறுந்தோடும் எக்காலம் - பொல்லா
ஆக்கினை தெண்டம் மறியல் கொடுப்பது
அரசரின் காரணக் கோலம்
நந்நீதி எண்ணியே புண்ணியம் செய்து
நடந்தவரை அடிமூலம்
பன்னெடுங்காலம் பழிசெய்த வீணர்
பஞ்சு போலற்றுப் பறந்து திரிந்திடுவர்
தண்ணறிவாளர்கள் கண்டு மகிழ்ந்திட
சாற்றினேன் செய்கு அலாவுதீன் இக்கவி

பாட்டி பிரிந்த விஷயத்தைப்
பகருவன் அன்னமே

காணிக்கை தாறதில்லை யென்றும்
ஏன் என்றும் கேட்டாக்கா
பள்ளிப்புறக்காணி தந்தால் தருவனென்றும்
அஞ்சி மரைக்கார் யோசனை பண்ணி
அரைவாசி தாற னென்றான்.
பாட்டி புறிஞ்சதும் பதையத்துப்பட்டதும்
பாரி மரைக்காரு பங்கு எடுத்ததும்
பாட்டி புறிஞ்ச பதையத்தைக் கேளுங்கடி (பாட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியைக் கட்ட வேணும் என்று
இருபேரும் மனச் சந்தோஷமாகவே
பள்ளியைக் கட்டி பாங்காகவே பாங்குகள் சொல்லி
பச்சைக் குளோபை பளிங்கு விளக்கேற்றி
நேந்து கொடி மரம் நெய்யில் விளக்கேற்றி
மாடு அடையவும் மண்ணைப் பிரட்டவும்
ஏற்கா தொருகாலம் ஏக மொகிய்யத்தீன் (பாட்டி)

செத்த பிணத்தைத் தெருவில் போட்டதும்
பச்சைக் குட்டியைக் காவலுக்கு வைத்ததும்
போய்ப் போலீசுதான் நீதவானைக் கண்டு
போதிய மட்டும் தெண்டம் தாரேனென்று
மையம் எடுத்ததும். (பாட்டி)

கரைத்தீவில் புலவர்காலத்தில் நடந்த ஊர்ச் சண்டையை இப்பாடல் கூறுகிறது.

## நந்நெறி

பல்லவி

தானோன் தீதே நீ ஏமாந்தொழியாதே
சங்கைய தாகவே தேனே நீ கேட்பாய்

அனுபல்லவி

கானின் வேடன் கரமான் பிணைவிட்டோர்
கோனே நம்பாவம் போக்கிடுவாரே
(தானோன்)

சரணம்

ஆதியின் தூதே நம் சோதி முகம்மத்
அன்புறும் பொன்னடி தம்பமே செய்வாய்
நீதி வழிக்குயர் நெஞ்சம் இல்லை
பாரில் நமக்கிது மேன்மை செய்வாரே
(தானோன்)

சூது வாது பொய்யே துமில்லை
சூட்டும் கவி செய்கலாவுதீனோனே
மாது மோகவலை மீதில் விழாது
கோதையே நீ சென்று ஓதிடுவாயே
(தானோன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புத நீதி ராஜரே

கற்பக மாமுஹம்மத் - நும்பதம் நம்பினேனே
காயஸ்தூல மாயை காயஸ்தூல மாயை - காயஸ்தூலமாயை
செம்பொற்பதியை யாளும் - ஜெம்மலாதி தூதே
இன்பவினோத வாழ்வே ஈமானிலையுள் வாழ்வே
நம்பும் பயல் யான் யேழை

கோடான கோடி கவி பாடிடுவோம்
கொஞ்ச மேனும் விதியை யுணரார்
நாடாளுமன்னரே எனையாள நீரலால்
நாநிலத் தெவருமில்லையே
பற்பலர் கூடி வணங்கும் பொற்கழல் நம்பினேனே
அற்புத நீதி ராஜரே அழுதேனென்றும் காரும்
செப்பும் செய்கலாவுதீன்.

-ஓ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி எம்.எம். லெப்பை

புத்தளத்தை சேர்ந்த புளிச்சான் குளம் என்ற சிறிய கிராமத்தில் *1901ஆம் ஆண்டு கவி எம்.எம்* லெப்பை என்று அழைக்கப்படும் எம்.முஹம்மது அலி உதுமான் லெப்பை பிறந்தார். அவரது தந்தையின் பெயர் முகம்மது நூர்தீன் லெப்பை. தாயார் பெயர் உமறுநாச்சியா. இவர் இவ்விருவருக்கும் ஒரே மகன் ஆவார்.

இளமையில் குர்ஆனையும் மார்க்க கல்வியையும் நன்கு கற்றார். 1913ம் ஆண்டு புளிச்சான்குளத்தில் பாடசாலைக் கல்வி ஆரம்பமானது. அலி உதுமான் தமது பன்னிரென்டாவது வயதில் பாடசாலையில் சேர்ந்தார். அவருக்கு நல்ல தமிழ் கல்வி இருந்ததால் அவர் 3ம் வகுப்பில் சேர்க்கப்பட்டார். அங்கு அதிபராக இருந்த திரு. ஜெ.எம். அல்பிரட் என்பவரிடம் ஏழாம் வகுப்பு வரை கல்விகற்றார். இளம் வயதிலிருந்தே அவர் சிறந்த வாசிப்பு பயிற்சியை வளர்த்துக் கொண்டார். பாடசாலையில் அவர் அபிநய பாடல்களை நன்கு நடித்து பாடினார். அவருக்கு நல்ல குரல் வளமும் இருந்தது. அவரது திறமைகளை அவதானித்த அல்பிரட் ஆசிரியர் அவருக்கு ஊக்கமளித்தார்.

இவர் மூன்றாம் வகுப்பு படிக்கும்போது அல்லது பன்னி ரெண்டாவது வயதில் சிறுசிறுபாடல்களை இயற்றினார். குறிப்பாக புளிச்சான் குளத்தின் விவசாயத்தையும் தமது ஊர் விவசாயி களையும் வாழ்த்தி குறிப்பாக நெற்செய் கையை ஊக்குவிக்கும் பல பாடல்களை அவர் பாடத் தொடங்கினார்.

சிறுவயதிலிருந்தே மார்க்க அறிவைப் பயின்று வந்த தோடு ஊரில் குர்ஆன் மத்ரஸாவை நடத்தினார். மார்க்கப் போதனைகள் செய்ததோடு புளிச்சான் குளத்தில் 'கதீப்' ஆக இருந்து 'குத்துபா' பிரசங்கங்களும் செய்தார். அல்ஹாஜ் எஸ். எம். ஏ முத்தலிப் போன்ற பலர் அவரிடம் குர்ஆன் ஓதக்கற்றுள்ளனர். இதனால் ஊர் மக்கள் அவரை 'லெப்பை' என அன்புடன் அழைத்தனர். பாடசாலையில் 7ம் வகுப்பை முடித்துக் கொண்டதுடன் 1923ல் அதே பாடசாலையில் உப ஆசிரியராகப் பணியாற்றினார்.

நீண்டகாலம் வரை இவர் ஆசிரியராகக் கடமையாற்றினார். இவர் உடப்பு, நீர்கொழும்பு, புத்தளம், பரகஹாதெனிய, பாடசாலைகளில் கடமை புரிந்து 1960ல் ஓய்வு பெற்றார். இவர் 1922ம் ஆண்டு எஸ். முகம்மது மறியம் என்பவரை திருமணம் செய்தார். அவருடைய மகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் அசனத்துல் ரில்வான். இக்காலத்தில் புளிச்சான் குளத்தில் இவர் ஒருவரே கவி பாடும் ஆற்றல் உள்ளவராக இருந்தார். அக்கால காலச்சாரத்திற்கு ஏற்ப களிகம்பு பாடல்களை இயற்றுவதிலும் களிகம்பு ஆட்டத்தை பயிற்றுவிப்பதிலும் ஈடுபட்டார்.

கூத்துமுறையிலான நாடகங்களை நெறிபடுத்தி மேடை யேற்றினார். அவ்வப்போது கவிதைகளையும் இயற்றியுள்ளார். நபிகள் நாயகத்தின் பிறந்த தினத்தை மீலாத் விழாவாக ஏற்பாடு செய்து ஊரவர்களை அதில் சம்பந்தப்படுத்தினார். அப்போது மௌலூது வைபவங்களும் கந்தூரிகளும் இவ்வூரில் அதிகளவில் நடைபெற்று வந்தன. மீலாத் விழாக்களில் மார்க்க பிரசங்கம் செய்வதிலும் அவ்விழாக்களில் நபிகள் பேரில் சிறிய பிரசுரங்களை அச்சிட்டு வெளியிடுவதிலும் அவர் பேரார்வம் கட்டினார். நபி **அவதார அம்மானை, தாராணியின் பூரண இரட்சகர் இஸ்லாத்தின் இறுதி நபி, செய்கு அலாவுதீன் ஒலியுல்லா புகழ்** போன்றவை இவ்வாறு அவர் வெளியிட்ட சிறுபிரசுரங்கள் ஆகும். இவை பெரும்பாலும் உரைநடையாக அமைந்திருந்தன. சில பிரசுரங்கள், பாக்களையும் செய்யுள்களையும் கொண்டி ருந்தன. இவற்றுள் பல இன்று கிடைக்கும் நிலையில் இல்லை. இவர் இயற்றிய இஸ்லாத்தின் இறுதி நபி (ஸல்) என்ற சிறிய உரைநூல் நமக்குக் கிடைத்துள்ளன. 1938ல் வெளியான இந்நூலின் முன் அட்டை பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூலில், இஸ்லாமே ஆதிமதம், அபத்தமதங்கள் இதர மதங்கள், (ரசூல் அலை) இன்றியமையாத காலம், அரேபியாவில் ரசூல், உலகம் அனைத்திற்கும் ஒரே ரசூல், இஸ்லாம், போன்ற தலைப்புக்களில் அமைந்துள்ள ஒரு கட்டுரை காணப்படுகிறது. மேலும், இந்நூலில் அவர் தந்துள்ள விவரங்கள் இஸ்லாம் பற்றியும் நபிகளின் வாழ்க்கை பற்றியும் அவர் பரந்த அறிவைப் பெற்றிருந்ததற்கு நல்ல உதாரணமாகும். அவரது எழுத்து திறமையையும் இந்நூல் நன்கு காட்டுவதாக உள்ளது.

தமிழ் நாடு பா. தாவூத் ஷாகிபின் தாருஸ்ஸலாம் சஞ்சிகையில் அவர் பல சிறு கட்டுரைகளையும் எழுதி வந்துள்ளார். அவரது கவிதைகள் தாருஸ்ஸலாத்திலும் ஏனைய பிரசுரங்களிலும், அவ்வப்போது வெளியாகி உள்ளன என அவரது மாணவர்கள் கூறுகின்றனர். அத்துடன் அவர் சிறந்த மேடை பிரசங்கி. பேராதனை, சிலாபம், புத்தளம், பரகஹாதெனிய போன்ற பல இடங்களில் பல முறை அவர் சொற்பெருக்காற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பு காலங்களில் பிள்ளைகள் பாடுவதற்காக சில இஸ்லாமிய பாடல்களையும் இயற்றி வழங்கியுள்ளார். அப்பாடல்களை அக்காலத்தில் குர்ஆன் மத்ரஸா பிள்ளைகள் நோன்புகாலங்களில் வருடாவருடம் பாடியுள்ளனர். இது ஹம்சுப் பாடல் என அழைக்கப்படும்.

கரைத்தீவுப் புலவர் செய்கு அலாவுத்தீன் புலவரிடம் அலிவுதுமான் அதிக பற்றுள்ளவராக விளங்கியதுடன் அவரது பாடல்களையும் அவர் சேகரித்து வந்ததாக தெரிகிறது. செய்கு அலாவுதீன் புலவரை போலவே தமது பாடல்களிலும் இறுதி வரியில் தமது பெயரை பொறிப்பதை அதாவது முத்திரை அடி வைப்பதை இவரும் பின்பற்றினார்.

அலி ஊதுமான் தான் இயற்றிய **கீர்த்தி மஞ்சரி** என்ற பாடல் நூலை புலவர் செய்கு அலாவுத்தீனிடம் காட்டி அவரிடம் இருந்து ஆசியையும் ஒரு வாழ்த்துப்பாடலையும் பெற்றுக் கொண்டார். அலிஊதுமான் (எம்.எம்.லெப்பை) பாடிய கீர்த்தி மஞ்சரி இன்று கிடைக்கும் நிலையில் இல்லை. ஆனால் கீர்த்தி மஞ்சரிக்கு செய்கு அலாவுதீன் புலவர் வழங்கிய வாழ்த்துப்பா நம் கைகளில் உள்ளது. அது வருமாறு:

**நன்னூ லகப்பொருள்சேர் நல்யாப் புவமையணி**
**சொன்னூல்கள் பற்பலவே சோதித்து - இந்நூல்**
**மலியுதமிழ் மெய்க்கீர்த்தி மஞ்சரியைப் பாடும்**
**அலியுதுமான் என்றோதும் அன்பு**

இதில் உள்ள குரமங்கை என்ற பாடல் அவருடையதா அல்லது படிப்பிப்பதற்காக அவர் பயன்படுத்திய பாடலா என்பது தெளிவில்லை. புளிச்சான் குளம் அலிஉதுமான் புலவர் 1958ல் (1960?) நோய் வாய்ப்பட்டு கொழும்பு வைத்தியசாலையில் காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேளாண்மை வளர

தாளாண்மையுள்ள மாந்தர்களாய் நாந்திகழ்வோமே
வேளாண்மை செய்தி லாபங்கண்டு நாமுயர்வோமே
பேராண்மை கொள்வோமே

ஏரிலையா நிலமி லையா உரமிங்கில் லையா- நல்
உரமிங்கி ல்லையா
நாம்மே ரிழுக்க எருதிலையா
எருமையில்லையா நாமென்னமுடமாவுடம்
பிறகால்கையில்லையா
(வேளாண்மை)

கூட்டியள்ளுஞ் சாம்பல் கஞ்சல் குவிந்துளவிங்கே
கஞ்சல் குவிந் துளவிங்கே
பைங் குழைதழைகள் தருமடர்ந்த காடுளதிங்கே
ஆட்டெருவு மாட்டெருவு மதிகமுண்டிங்கே
(வேளாண்மை)

குளத்திநீருதவு மாறுகுளம் நிரம்ப வுளஇங்கே
சம்பாசெந்நெல்வி ளையுங்காணிகளோ
நிறைந்துளவிங்கே
விஸ்திர நிலமும்பன்பயிரும்இசைந்துளவிங்கே
(வேளாண்மை)

காருண்ணியமுடைய நம தரு மரசாங்கம் -நம்
கமக்காரருக்கோ அளவின்றிச் செகிறதுபகாரம். சோம்
பேறிகளாயின்னமு நாம் இருப்பதழகோ.
(வேளாண்மை)

அந்நிய நாட்டரிசி நமக்கென்ன சதம்
நமதருமந்த நாட்டுணவினைய்ப் போல் அது உதவுமா
நம்மரவள்ளியின் றில்லையென்றால்
நாம் பிழைப்போமா
(வேளாண்மை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவையிகழ்ந் தூழியஞ்செய்து வகையடைந்தோம்
நாம் - உவகையடைந்தோம்.
உமி கலந்தவரிசியுட்
கொண்டு டல மெரிந்தோம்
தீப் - புழுமெலிந்த கோதுமைமா புசித்திட்டோம்
(வேளாண்மை)

கஞ்சியு தவெனப் பிறனைக் கெஞ்சவும் மாச்சே
இன்று - கெஞ்சவு மாச்சே நாங்
கண்கலங்கி நின்றவன்முன் கதறவும்
இன்-றிஞ்சி தின்றகுரங்கெனப் பல்லிளிக்கவுமாச்சே
(வேளாண்மை)

முன்பலதேயங்கட்கடனள்ளித்தந்த நந்தீவு
அனந் - தந்தனந்தீவு
சேனன் முதலாங் கமவரசர் ஆண்டபொன்தீவு
இன்-றன்னப்பபிச்சை கேட்பின் எமக் கழுகைவராதோ
(வேளாண்மை)

கலப்பையினால் லுழுதுசெந்நெற்கழனி விதைப்போம்
நெற்கழனி விதைப்போம்
அயற் - காடுவெட்டி தினைகுரக்கன்
சோளம் விதைப்போம்
சோம்பலற்றே உரமூட்டி ஜலம்பாய்ச்சி வளர்ப்போம்
(வேளாண்மை)

இங்ஙனம் நாம் செய்யின் பண்டை யெழிலையு
நாமடைவோம் பண்டையெழிலை நாமடைவோம்
இவனுள் பஞ்சம் பசியை யெளிதிலொழிப்போம்
எம்-லெப்பைஉளம்போலுலகப் போரினைவெல்வோம்
(வோளாண்மை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறமங்கை

மாணவர்: மலை நாட்டில் வாழும் குறமங்கையரே நில்லும்
மழையுலகில் பெய்யும் அந்த வகை எமக்குச் சொல்லும்

குறத்தி: தலை நிமிர்ந்துபாரும் விண்ணில் தவழும்
கருமுகிலலை தனையர்களே அதிலிருந்தே
தரையில் மழைபொயுழிது

மாணவர்: சங்குவடம் பூண்டகரும் சிங்கியர்காள் நீரே
அங்கு முகில்வந்த வகை அதனை உரைப்பீரே

குறத்தி: செங்கதிரால் நீர் நிலைகள் திரிபடைந்த ஆவி
அங்குசென்று குளிர்ந்துமுகில் ஆனது மாணவர்காள்

மாணவர்: அந்தமுகில் எப்படி நீர் ஆனது? பின்மழையாய்
அவனிமிசைபெய்த (து) அதை அறைந்திடும் சிங்கியர்காள்

குறத்தி: அந்தமுகில் சீதகாற்றடித்திட நீர் ஆகி
அம்புவியில்மழைபொழிந்த (து) அறிந்திடும் மாணவர்காள்

மாணவர்: தினைமாவும் தேனும் உண்ணும் சிங்கியர்காள்
செல்லும் வழி அதை எமக்குத் தெரிய உரை
மழை நீர்தருவீர்

குறத்தி: சுனை சமுத்திரம் நதி அகழி துரவு சென்று
தேங்கி தினமும் நமக்(கு)இதம் புரிந்து திகழ்ந்
திடும் மாணவர்காள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேரியா ஒழிய

பொல்லாம லேரியாவோடு
பொருதவாரும் நம்பீர்

பல்லாயிரக்கணக் கானமக்களையே
பலிகொள் வதினிற்கிணை எதுமிலையே
அல்லல்- தருங்கொசு கொடுவினையே
அவனியிற் காச்சலைப்பரப்புதென உணர்ந்தே
(வாரும்)

விஷஜுரங்கொண்டோன் இரத்தத்தில் வசிக்கும்
விஷக்கிரு மியை நுளம்பு இரத்தத்தோடுறுஞ்சும்
கொசுபின் இரவில் நமைவந்து கடிக்கும்
கொடுங்கிருமியை நம(து) இரத்தத்தில் கலக்கும்
(வாரும்)

கொசு தீண்டிய சில பொழு துக ழிந்தே
குளிர் உதறலோடனல் தலைவலி மிகுந்தே
கசிந் திடு-வேர்வை வாந்தியும்வந்தே
காய்ச்சல் என்றுடலம் தேய்த்தெம்மை வருத்தும்
(வாரும்)

தேங்கிய நீரில் ஜெனித்திடு நுளம்பை
அதன் ஜெனிப்பிடமழிப்பீரே
நாம் கொசு வலையுள் தூங்கியே நுளம்பு
நமை நெருங்காமல் நல் அரண் இயற்றிட
(வாரும்)

கொடும் ஜுரம் வந்தால் குயினைன் கொள்வோம்
கொதி ஜலம் கஞ்சி அலதை நாம் புசியோம் திடமொடு
நோயினர்க்(கு) உடனுதவிடுவோம்
செப்பிய பாவினால் துணிந்து ஓதுவோம்
(வாரும்)

அறிஞர்கள் உறவு கூடி
அநுதினம் கலந்து வாழ்கின்றார்கள்
மறுவறு தெளிவு தோன்றும்
மடமெனவாராய் மனத்தில் மேவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறியிருட் பிளம்பு நீங்கும் தீவினை எவையும் தீரும்
பெறுபலன் இதுபோல் யாதோர்
பெற்றியும் உலகில் இன்றே
(வாரும்)

## செய்கலாவுத்தீன் ஒலி

ஒலியே பொற் பாதந் தருவீர்
செய்கலாவுத்தீன் ஒலி
மெலிவாக யானே வேண்டி நிற்கின்றேனே
பலகத் துறை நகர் வாழ்
பகலவனே (ஹாஜா - ஒலி)

பள்ளி வாசல் துறை வாழ் பகலவனே - ஹாஜா(ஒலி)
அதிபருமது கபுர் - பதினோரிடத்திலுண்டு
இது போற் புதுமை வேறேங்கேயுண்டு (ஹாஜா-ஒலி)

பகுதாத் அதிராம் பட்னம் பள்ளி வாசற் துறை
மிகு சொல்லின் நகரமது - வினைவிடவே (ஹாஜா-ஒலி)

பச்சைக் குதிரையேறி பக்தர்க் குதவி கோரி
நற் சாமத்தில் தெருவில் நடப்பவரே
(ஹாஜா- ஒலி)
கண்யரே என் மனத்தின் ஹாஜத்துக் கை கூடிட
புண்யமாய் உதவி செய்வீர் புவி தனிலே
(ஹாஜா- ஒலி)
ஷம்சுத்தீன் மாதவரின் தங்கத் திருமகவே
எம்.எம் லெப்பை கவிக்கு இரங்கிடுவீரே
(ஹாஜா- ஒலி)

## தன் வளர்ப்பு மகன் விபத்தில் இறந்த பொழுது பாடியது.

கண்ணே ஆலமல் ஹுதா கல்புக் களஞ்சியமே
மண்ணில் மடிந்தனையோ வானிடித்து மாண்டனையே
என்னாவி போன்றவனே எனையேன் பிரிந்தனையோ
உன்னால் அழுகின்றேன் எப்பேதுனைக் காண்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக்காலத்தில் இறுதிக்கவி
பள்ளிச் சுவரில் எழுதப்பட்டது

அத்தினி அவள் அந்நாளில் அன்புளாள் என்னகத்தில்
முத்தென்றாள் பவளமென்றால் முழுங்கட்டா அகமேயென்றாள்
புத்தியை மயக்கி யெந்தன் பொருளெல்லாம் கவர்ந்த பின்னர்
சத்தியம் தவறி என்னைத் தவிக்க விட்டாள் இத்தரையில்.

## ஹம்சுப்பாடல்

பிஸ்மில்லாஹி இரக்கமுடைய பெரியோனே உனது
இஸ்மையோதி உனது புகழை இசைப்போமே இனிது

நபிகள் நாதர் சலவாத்தோதி நான்கு யார்களையும்
நல்ல ஸஹாபி நிதமும் நாங்கள் போற்றிடுவோமே

தாய்மாரே தகப்பன்மாரே தங்கள் வாசலிலே
தருமம் வாங்க வந்த எங்கள் சங்கதி கேளும்

உள்ளம் மகிழ உங்கள் பெயரைச் சொல்லிட உலகில்
பிள்ளை யில்லா கவலையாலே பெரியோனைத் தொழுதீர்

இரவும் பகலும் முந்தி யேந்தி இறையோனிடத்தில்
இரந்து கேட்கும் ஏழைகளுக்குத் தருமமும் கொடுப்பீர்
கத்தன் கிருபையாலே எங்களைக் கர்ப்பமும் தரித்தீர்
பத்து மாத கால வருத்தம் பல அனுபவித்தீர்

இடுப்புக் கடுப்பும் வயிற்று நோவும் எடுத்த உங்களுக்கு
படுக்க இருக்க முடிந்திடாமல் பாடும் பட்டீரே

பேறு காலம் நெருங்கி எங்களைப் பெற்றெடுத்தீரே
பேரும் பொழிய பெரியோனிடத்தில் துஆவுங் கேட்டீரே
(நீண்ட கண்ணிகள் தொடருகிறது)

-ஓ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவி சேக்கமரைக்கார்

சேக்கமரைக்கார் புலவர் 1918ம் ஆண்டு புத்தளம் பிரதேசத்தில் உள்ள கரைத்தீவு கிராமத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கா. முஹம்மது காசிம். தாயாரின் பெயர் செவத்த உம்மா முகம்மது காசீம் விதானையராக கடமை புரிந்தார். சேக்கமரைக்கார் ஐந்து வயதாக இருக்கும் போது தந்தை மரணமானார். தந்தையின் மரணத்தினால் பாதிக்கப்பட்ட தாய் செவத்த உம்மாவும், சில நாட்களில் மௌத்தாகி விட்டார். சேக்கமரைக்கார் ஐந்து வயதிலிருந்து அனாதையாகவே வாழ்ந்தார். கரைத்தீவு பாடசாலையில் 6ம் ஆண்டு வரை கல்வி கற்றார். தமிழ் மொழியிலும் தமிழ் இலக்கியத்திலும் ஆசிரியர்கள் மூலம் அவருக்கு நல்ல பயிற்சி கிடைத்தது. அத்துடன் புகழ்பெற்ற செய்கு அலாவுத்தீன் புலவரின் சீடராகவும் விளங்கியதால் அவருக்கு இஸ்லாமிய இலக்கிய அறிவும், பாடல் இயற்றும் அறிவும் மெல்ல மெல்ல கைவரப் பெற்றது.

இளம் வயதிலேயே இவர் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொண்டார். முக்கியமாக பா.தாவூத் சாகிபின் தாருஸ்ஸலாம், முஸ்லிம் முரசு போன்ற இஸ்லாமிய சஞ்சிகைகளை தொடர்ச்சியாக வாசித்து வந்ததோடு அவற்றை தமது வீட்டில் சேகரித்தும் வந்தார். அத்தோடு நபிகள் நாயகசரிதம் போன்ற பல இஸ்லாமிய நூல்களையும் அவர் வீட்டில் வைத்திருந்தார். அவரது இந்த நூல் சேகரிப்பு கவனிக்கப்படாததால் சில அகராதிகளை தவிர அவற்றுள் எதுவுமே இன்று கிடைக்க கூடியதாக இல்லை.

சேக்க மரைக்கார் பெரும்பாலும் எளிமையான இசைப் பாடல்களை இயற்றினார். அவருடைய பாடல்களில் செய்கு அலாவுதீன் புலவரின் பாதிப்பு அதிகம் காணப்படுகின்றது. இருந்த போதும் அவரது அநேக பாடல்கள் செய்கு அலாவுத்தீனின் பாடலைவிடவும் சாதாரண எளிய இசைப் பாடலாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் 1950ன் களின் பின்னர் தான் தான் அதிக அளவு பாடல்களை இயற்றியுள்ளார். இவருடைய பாடல்களை இருவகையாக பிரிக்கலாம்.

1. வழிநடை சிந்து மற்றும் கும்மி வடிவங்களில் அமைந்த நாட்டார் களிகம்பு பாடல்கள்

2. அவர்காலத்து சினிமாமெட்டுக்களுக்கான, சாகித்தியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி நிலையத்தில் இஸ்லாமிய கீதங்களுக்காக அவர் அதிக பாடல்களை இயற்றியுள்ளார். இவற்றுள் அதிகமானவை புத்தளம் இஸ்லாமிய கீதப்பாடகர் லாஹிர் என்பவருக்காக பாடப்பட்டுள்ளன. மற்றும் சில பாடல்கள் கோலாட்டத்திற்காகவும் அதிகாரிகளை வரவேற்பதற்காகவும் பாடப்படடுள்ளன. இவருடைய இசைப் பாடல்கள் பல 60களில் எழுதப்பட்டுள்ளன. இதுவரை இவரது எந்தப் பாடல்களும் பிரசுரமாகவில்லை. சேக்கமரைக்கார் 1984 ஒக்டோபர் 2ஆம் திகதி காலமானார்.

## மக்கள் கூட்டம்

தொகை விருத்தம்

பண்பு செறியும் தர்ஹா பள்ளிவாசல் நற்றுறையின்
துன்பம் தொலைக்கும் செய்யது
அலாவுத்தீன் ஒலியுல்லாவின்
அன்புபெருகி என்றும் அரும்புகழைப் பண்இசைக்க
தென்புதர வேண்டுகிறேன் ஜெம்மல் ஒலி நாயகமே

வருடம் ஒரு முறைதான் வந்து மக்கள் தான் கூடி
பிரியமுடன நேர்த்தி செய்வர் போற்றி தர்ஹாவில்
பரிசு பெற களியாட்டம் பற்றபல விநோதமுடன்
தெரிசனையில் மகிழ்வுறுவர் சென்றோர் தறுஹாவே

பார்த்து நம் மனமகிழும் பற்பல விநோதங்களும்
சேர்த்துக் கடைகள் கட்டி சிறந்திடும் வெளிகளெங்கும்
கோர்த்த மணி தன்னழகாய் கூடுவரும் மின்மினியாய்
பூத்திடும் அழகாய் வாண வெடிகளும் ஜொலிக்குமிங்கே

வாட்டமுடன் நோவினையில் வந்து மக்கள் தம்பதியில்
கேட்டவரந்தான் கொடுத்து கிருபை செய்யு எம் மொலியே
பாட்டதனில் சரிபிழைகள் பண்புடனே தான் பொறுத்து
தேட்டமுடன் வித்திடுவீர் ஜெமம்லொலி நாயகமே

சீர்பெருகும் கரைத்தீவின் சேயன் சேக்காமரைக்கார்
பார்புகழும் எம்மொலியின் பக்கம் வைத்து பாட்டிசைத்தோன்
பேர்புகழும் செந்தமிழில் பொங்கி வர இன்னிசையே
நேர்மையுடன் லாஹிருக்கே நின்று தவும் எம்மொலியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணைக்கட்டுப்பாடல்

பார்ப்போம் வரவேற்பு பெண்ணே! பணிவாக நடந்து வாகண்ணே!
ஏர்புழான இலவன்குழம் நகர் - இன்பமாய் மாந்தர்கள் ஒன்றாக
கூடியே

பேர் புகழ் நெயினாமரைக்கார் வரவேற்பை
பட்சமாய் தோழியும் கூட்டிவா போகலாம் (பார்ப்போம்)

காலாகாலத்தில் நாம் வேளாண்மை செய்துமே
கஷ்டமடைந்து வந்தோமே - நிதம்
நாலாபக்கத்திலும் தண்ணீர் இல்லாமலே
நற்பயிர் சோர்ந்திட நாமே - அங்கு
வேளாவேளைதன்னில் அந்நீரைப்பாய்ச்சிட
வேகமுடன் நடந்தோமே - நாம்
சூளும் இரவதனில் விஷ ஜந்து பாராமல்
சுற்றிச் சுற்றித் திரிந்தோமே
வாழும் மனிதர்கள் ஒன்றாய் நாம் போய் சேருவோமே
வாய்க்காலை வெட்டி வளம் செய்ய வைத்தோமே
கேளடி இன்னமும் ஆற்றையும் கட்டினோம்
கிட்டி வரும் தண்ணீர், எட்டியே போகுது
(பார்ப்போம்)

கஷ்டத்துடன் மக்கள் நெற்பயிர் செய்துமே
காண்பது மிச்சமில்லாமல் - நிதம்
நஷ்டமடைந்து கடன்பட்டு மக்களும்
நாளும் துயருறலானோம்
எங்கெங்கு சென்றாலும் அங்கெல்லாமே கடன்
கேட்கமனமது கூசும் - அங்கு
சங்குபதியிலும் சங்கத்திலும் கடன் தான்பட என்றும் நேரும்.
...................... ......................... .......................

மங்கையே கேள் ஒரு மாபெரும் கஷ்டத்தை
நாடெல்லாம் கண்ணிராய் ஓட - அங்கு
பொங்கி காளாவி ஆற்று நீர் எங்களின்
பொன்பொருள் ஆடு மாடுடனே- நாங்கள்
தங்கிய வீடும் தரைமட்டமாகவே
தாவிப் பரன் மீது ஏறினோம் - ஒளி
மங்காத நாயன் அருள்பெற வெள்ளமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றவே மூன்று நாள் இருந்தோம்
இந்தகதிவிட்டு எங்களைக்காக்கவே
ஏந்தல் எம். காதர் சாகிபு மரைக்காயர்
சொந்தம் போல் மக்களைப்பாதுகாத்துக் கொண்டு
சென்று கரைத்தீவு மீண்டும் வந்தோம் கேளாய் பார்ப்போம்

காலா காலமாக கேட்டு வந்தோம் - நாம்
காளாவி ஆற்று அணைத்திட்டம் - அதை
மேலோர்கள் வந்தார்கள் பார்வையிட மட்டும்
வேறோன்றும்மில்லை நம் கஷ்டம்
இங்கு காலையும் மாலையும்
தான் படும் பாடதை
கண்கொண்டு பார்த்திட வேட்கம்
இந்த வேளையாயினும் கேட்டு
நலன் பெறவேண்டும்
என்றே எங்கள் நாட்டம்
கோலாகலமாக இன்று நாம் கூடியே
கொண்டாட்டமாக வரவேற்பு செய்துமே
மேலோன் உதவியால் வந்த அமைச்சரே
வேண்டவே கேட்டிடும் செக்காமரைக்கரே!

## கரைத்தீவு நகர்

சாலை அலங்கிருதம் பெண்ணே
போய் பார்ப்போம் வாடி என் கண்ணே

சந்தன குங்குமம் அணையடி
சாந்த முகக்கண்ணில் சந்தன மையகீறடி
இங்கிர்தமாக தங்க நகைகளும்
இட்டுவாடி நீவாவடி என் சொல் தட்டாமலே (சாலை)

பார்புகழ் சோலைகள் காவினில் சூழும்
பதி கரைத்தீவு மாநகரம்
நல்ல சீர்புகழ் கிராம முன்னேற்றச் சங்கமதின்
செய்நிறை வெண் குழு வதனம்
நல்ல நேர் புகழாகவே காத்து இரச்சிக்கும்
நம் எம்பியும் ஏஜீஏ துரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல ஏர் புகழ் செல்வம் விளங்க உதவிடும்
எம்பகுதி அதிகாரியும்
நாளும் காலத்திலே
நல்லுதவி செய்வார்கள்
கண்ணியமிக்க எம்ஔச் அவர்களும்
கோலத்தில் வர்ண உடை தரித்து - நீ
கூடவே தோழியும் கூட்டிவா போகலாம்.

சிங்காரமாகவே குச்சி வீட்டின் கூரை
சிரசில் படாமலே நழுகி - நல்ல
மாங்கா புழுதி புதுஉடைதனிலே
மாசு படாதணுகி
பங்கமில்லாமல் பயணம்செய் வீதியில்
பார்கொத்துபா பள்ளி இறையின் - அங்கு
பொங்கும் துவாஓதி பின்பு மகிழ்வுடன்
போய் புதுவீதி ஒன்றனருகில் - செல்ல
வற்றாத தெப்பகுளம் ஒன்று - முன்னால் தோணுது
எத்திசையும் பந்தின் ஓசை முழங்குது
ஏகி நடந்துவா அந்தா தெரியுது.
கால கால மட்டும் நாம் பட்டதொரு கஷ்டம்
கழிஞ்சி போச்சிது (சாலை)

## பள்ளி வாசல் துறை ஒலி

பண்புசெறியும் தர்ஹா பள்ளிவாசல் நற்றுறையின்
துன்பம் தொலைக்கும் செய்கு
அலாவுத்தீன் ஒலியுல்லாவின்
அன்பு பெருகி என்றும் அரும்புகழைப் பண்இசைக்க
தென்பு தரவேண்டுகிறேன் ஜெம்மல் ஒலிநாயகமே

வருடம் ஒரு முறைதான் வந்து மக்கள் தான் கூடி
பிரியமுடன் நேர்த்தி செய்வர் போற்றி தர்ஹாவில்
பரிசு பெறக் களியாட்டம் பற்பல வினோதமுடன்
தெரிசனையில் மகிழ்வுறுவர் சென்றோர் தர்ஹாவே

பார்த்து நம் மனமகிழும் பற்பல வினோதங்களும்
சேர்த்துக் கடைகள் கட்டி சிறந்திடும் வெளிகளெங்கும்
கோர்த்த மணி தன்னழகாய் கூடுவரும் மின்மினியாய்
பூத்திடும் அழகாய் வாண வெடிகளும் ஜொலிக்குமிங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டமுடன் நோவினையில் வந்துமக்கள் தம்பதியில்
கேட்டவரந்தான் கொடுத்து கிருபை செய்யும்
எமதொலியே
பாட்டதனில் சீர்பிழைகள் பண்புடனேதான் பொறுத்து
தேட்டமுடன் காத்திடுவீர் ஜெம்மலொலி நாயகமே

சீர்பெருகும் கரைத்தீவின்
சேயன் சேக்கமரைக்கார்
பார்புகழும் எம்மொலியில்
பட்சம் வைத்துப்பாட்டி சைத்தோன்
பேர் புகழும் செந்தமிழில்
பொங்கிர இன்னிசையே
நேர்மையுடன் லாஹிருக்கு
நின்றுதவும் எம்மொலியே

## அலங்காரக்கூடு

(பல்லவி)
கூட்டினலங்காரம் பாராய்
நாட்டும் புதுமையைக் கேளாய்

(அனுபல்லவி)
பள்ளிவாசல்துறைப் பதியில்
பார்பல் நிகழ்ச்சிகள் நடையில்
வள்ளலாம் செய்கு அலாவுத்தீன்
வளர்புகழ் ஒலி தர்ஹாவில் - கூட்டின்

அற்புதக் காரணங்கள் காட்டும்
அண்டினோர் வல்வினை போக்கும்
கற்பகத் தருவாய் எவர்க்கும்
காவலாய் வரும் குதுபொலியின் - கூட்டின்

நாட்டம் நிறைவேற நாடி
நன்மையைப் பெற சனம் தேடி
கூட்டம் மிகுதியாய்க் கூடி
குறை நீங்க குதுபை வேண்டி - கூட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலின் சங்கீதம் கேளாய்
பண்புறும் கோலாட்டம் பாராய்
காட்டிடும் வேடிக்கை வாணம்
கருதியே விண்வெளி பாராய் - கூட்டின்

பார்க்குமிட மெல்லாம் கடைகள்
பலவித அழகுற பற்பல உடைகள்
ஈர்க்கும் மன மதை மகிழ்வாய்
இலங்குது இரவது பகலாய் - கூட்டின்

வருகுது பார் அங்கேகூடு நல்ல
வானொளி நட்சத்திரம் போல் நேராய்
உருவது தட்டது நான்காய்
ஊர்ந்திடும் மின்மினி அழகாய் - கூட்டின்

## ஆலத்தின் ஒளியே

ஜெகமீதினில் எங்கள் நபிநாதரே
இகலோக ஒளிவீசும் புகழ் வேதரே
அகமேவும் இருள் போக்கும் மறைபோதரே
அருள் தந்து எமைக்கார்க்கும் மகுமூதரே

அறுசினில் இறையோடு மொழிபேசியே
ஆலத்தின் ஒளிவான நபிநாதரே
மறுமையின் துயர் போக்கும் மகுமூதரே
மாட்சிமை முகம்மது நபிநாதரே
புவிமீதினில் ஆமி னா பாலரே
புகழ்மக்கமாநகர் ஜெயசீலரே
கவின்மிகு மதினாமா நகர் ராஜரே
காத்து எம் குறை தீர்க்கும் காருண்யரே

மான் தன்னில் பிணைநின்ற மகிழ்நேசரே
மாறாதவினை தீர்க்கும் மகுமூதரே
தேனின்பகலிமாவின் திருவாசரே
தெளிவாக மறைதந்த புவிராஜரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலத்தின் அருட்கொடை எம் - நாதரே
வான்மதி தனைப் பூவில் அழைத்தவரே
வல்லோனின் தூதரெம் நபிநாதரே
கோன்நபி ஹதிஜாதன் மணவாளரே
குவைலிதின் மருகராம் நபிநாதரே
தினம் எங்கள் துயர் போக்கும் மகுமுதரே
கோமான் எம்முஹம்மதுறசூல் நாதரே

## ஜோதியானவர்

பிறந்தாரே நபி பிறந்தாரே
புவியினில் ஜோதியாய் பிறந்தாரே
நிறைந்தாரே அவர் நிறைந்தாரே
ஆண்டவன் பக்தியில் நிறைந்தாரே - பிற

சங்கை றபீஉல் அவ்வலின் திங்கள்
சார்ந்த பனிரெண்டிலே
திங்கள் ஒளியாய் எங்கள் நபியும்
ஜெகமும் புகழ்ந்திடவே - பிற

மாண்புயர்மக்கமா நகர் தனிலே
மகிமை ஓங்கிடவே
வான்புகழ் ஒளிவின் மதிபோல் நபியின்
வணக்கம் துலங்கிடவே - பிற

அப்துல்லா மகவாய் அறிவிநற்சுடராய்
ஆமீனா ஈன்றெடுத்தே
அகமும் குளிர ஜெகமும்புகழ
அழகுற அகமதுவே - பிற

பாலைவனத்தில் ஜோதி ஒளியாய்
பாரோ மகிழ்ந்திடவே
பிறந்தார் வளர்ந்தார் பகர்ந்தார் மறையை
பாரில் நலம் பெறவே - பிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமும் கிளை அபீத்தாலிபின்
அழகுமனை துலங்க
அண்ணல் நபியாய் புவியின் புகழாய்
அவனியில் உதித்தாரே - பிற

## மன்னர்நபி

மானிலத்தில் மன்னர் நபி பிறந்தார்களே - மக்க
நகரில் வானவர் தீன்முழங்கிடவே
நானிலம் சிறக்க நபி பிறந்தார்களே
நன்மையான போதனையைப் பகர்ந்திடவே

சங்கையாம் றபீஉல் அவ்வலின் மாதம்
சார்ந்த பிறை பனிரெண்டதின் வாரம்
திங்கட்கிழமை இரவதின் நேரம்
தீன்தீன் முகம்மது நபிபுகழ் பெறவே - மானி

அப்துல்லா புதல்வர் அவனியில் புகழ்வாய்
ஆமினாமகவென அரும்பெரும் மருந்தாய்
முப்பதி சிறக்க முதல்வன்தூதாய்
முழங்கிடதீன் முஹம்மது மகிழ்வாய் - மானி

மக்கநகர் க:.பா வடகிழக்கில்
மதித்திடும் ஜெம்றூத்துஸ்தா நடுத்தலத்தில்
தக்கவரபிதாலிபு திருமனையில்
தாரணிபுகழுடன் தீன் தழைத்திடவே - மானி

காரணக் கடலாய் நபி பிறந்திடவே
ஹன்னாசிபயந்து கலங்கி நின்றிடவே
உஸ்தா குபல் புத்துஹான் தொலைடவே
உத்தமர் புகழுடன் தீன் முழங்கிடவே - மானி

உலகத்தில் மாந்தர் உண்மையாய் நடந்து
உத்தமர் மொழிந்திட்டமறைவழி தொடர்ந்து
பலனுள்ள அமல்கள் பண்புடன் செய்து
பாரினில் தீன்தீன் கொடி நிலைத்திடவே - மானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியின் ஒளிவெ அடியேனை காத்து
அன்பென்னும் நிகரில்லா அறிவினைத்தந்து
சோதியின் ஒளியில் சேர்ந்திடக் கேட்கும் உதவி
சேக்கமரைக்கா நென்றும் காத்திடவே - மானி

## வல்லோன்

வல்லோன் தனைவணங்கு - நண்பா
வருத்தம் தொலைத்தவிடு உன்
வல்வினைபோக்கி நீ வருந்தியே நல்அமலை
வகையுடன் செய்து கொள்ளு - வல்லோன்

காலங்கள் தவறாது இறைவனை வணங்கு
கருணை மனதுடனே - நன்றாய்
பாலங்கடக்க பாரில் வணங்க - நீ
பண்புடன் உறுதி கொண்டு - நன்றாய்
(வல்லோன்)

ஆதி இறைவன் ஏவலை எடுத்து
அன்புடன் நடந்து கொள்ளுநிதம்
துன்பமில்லாமல் சந்தோஷத்துடன் நீ
சுகமுடன் வாழ்ந்திடவே - நல்ல
(வல்லோன்)

சோதி வழங்கும் மறை வழிதேடு
சொர்க்கம் அடைந்திடவே
நீதியுடனே பூவினில் வாழ்ந்துநீ
நித்தம் தொழுது கொள்ளு - இறைவனை
(வல்லோன்)

தந்தையும் தாயையும் குருவையும் அன்பு
தவறாமுறை நடந்து
நிந்தனை அகற்றி நெறியாய் இறையை நீ
நித்தமும் தொழுது கொள்ளு - இறைவனை
(வல்லோன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவப்புதல்வரே

பிறந்தனரே புனிதமுடன் மக்கநகரிலே
புகழ்பெறவே தீன்முழங்க புவியின் மீதிலே
திறமுடனே மறைபுறுக்கான் தெளிவதாகவே
திசைகளெட்டும் தீன்முழங்க - நபிகள் பிறந்தனரே

அப்துல்லாவின் தவப்புதல்வர் அவனிதன்னிலே
ஆமினாவின் அகமகிழ அழகு ஜொலிக்கவே
முப்பதியும் சிறக்க அபுதா லிபுவின் மனையிலே
முழுமதிபோல் தீன்முழங்க நபிகள் நாதரே

மக்கா நகர் க.்.பா வடகிழக்கு திசையதில்
மதிக்கும் ஜெம்மறுத்தல்உஸ்தாதலமதில்
திக்கெட்டிலும் (தெளிவு பெற்று) விளங்கமாந்தரே
திறமுடனே தீன்முழங்க நபிகள் நாதரே

சங்கை தாம் ரபீஉல் அவ்வல் மாதந்தன்னிலே
சார்ந்த பிறை பன்னிரெண்டில் திங்கள் இரவிலே
மங்கிடாத மார்க்கம் தந்த மகிமை வேந்தரே
மானிலத்தில் தீன்முழங்க நபிகள் நாதரே.

## நபிமொழி

பல்லவி

கேளுங்கள் நபி மொழி நாடுங்கள் மறைவழி
தேடுங்கள் புவியினிலே - நிதமும்
தேடுங்கள் புவியினிலே

அனுபல்லவி

தெளிவுடன் கலிமா தென்புடன் மனதில்
தேன்சுவை அளித்திடவே
விழிப்புடன் அறிந்து வேளையாம் அமலில்
விரைந்திடப் பகர்ந்தனரே
நேமமாம் தொழுகை சுபுஹுடன் லுகறும்
நெறியுடன் அசறதின் பின்
தாமதமின்றி ம.்.றிபு இஷாவும்
தான் தொழப்பகர்ந்தனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈகையாம் ஸதக்கா இன்மொழிபகர்ந்தே
இறை மறை முறை கொடுத்து
தகைமையாய் முதலுள்ளோர்கள்தான்ஹஜ்ஜை
தான்செய்தல் கடமை என யோசி

எண்ணமும் செயலும் ஒன்றுபோல் நடத்தி
ஏகனைத் தொழுதிடவும்
மண்ணில் சுயநலமின்றியே வாழவும்
நபிபகர்ந்தனரே

கல்வி எனும் பெருஞ் செல்வத்தை தேடி
கருணை மனதுடன்
காலமறிந்து பொறுமையாய் நடக்க
காசீம்பகர்ந்தனரே

வஞ்சகம் பொறமை சூதுடன் களவும்
வாதையை தரும் மதுபானம்
துஞ்சிட அகற்றி தூய்மையாய் நடக்க
தூதர்பகர்ந்தனரே

உள்ளத்தை இறைவன் பக்தியில் செலுத்தி
உண்மை பொருளறிந்து
கள்ளன் இபுலீசு கலைத்திடா வண்ணம்
கருதி வணங்கு என்றே
பயகம்பர் பகர்ந்தனரே

## மங்கைவழி

மங்கையே மகிழ்வுடன் வாராய் - எங்கள்
நபிவழி தொழ வாராய்
பாங்குடன் பாவையே வாராய் - நல்ல
பண்புடன் தொழுதிட எவாராய்

காலை பஜா்முன் எழுந்திடவேண்டும்
கடன்கள் முழுதும் முடித்திட வேண்டும்
வேளைத் தொழுகை தொழுதிட வேண்டும்
வேதனை நீங்க நீ - வாராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி இறைவன் மறை வழிபாடு
அல்லும் பகலும் தீன்வழி சேரு
நீதியுடனே உன் செயல் நாடு
நிந்தனை நீங்க நீ - வாராய்

கொண்ட புருஷன் சொல்தனைப்பேணு
பேதையே பிறரை கண்டிட நாணு
அண்டினோர்க்கன்னம் அளித்தின்பம் காணு
அண்ணல் வழியே நீ - வாராய்

## அருள் ஒலி

அப்துல் காதிர் ஒலியேவரவேண்டும்
வாழ்வில் காண வேண்டும் - காதிர்

அண்டினோர் துயர் தீர்ப்பாய்
அடியேனுக்கருள்தருவாய்
அற்புத ஞான ஒலியெனும் ஜோதியே
ஒப்பில்லாக் காரணரே அப்துல்காதீரே - ஒலியே

பாரி லெம் பாவம் நீக்க
பண்ணிதனில் கேட்கிறேன்
பார்த்திபரே ஜெயிலானியின் - ராசரே
சார்ந்திடவே பணி வோடு நான்பாடுறேன் - ஒலியே
அனுதினமும் புகழும் திருமறை
நினைவினிலே வரவே வரந்தரு - ஒலியே

## சுடரொளி

திங்கள் நபிபிறந்தது மக்காவிலே - எட்டு
திசையிலும் வளர்ந்தது தீன்பயிரே
சங்கை நெறி மன்னவர்கள் தாள் பணிந்தே - தீனில்
சார்ந்திட செய்தனரே நபி மணியே - திங்கள்

ஆதியின் அருட்கொடையாய் நபியே - நம்மள்
ஆலத்தின் உருவானதய்யா நபியே
சோதியின் சுடரொளி யாம் நபியே எம்மை
சொர்க்கத்தில் சேர்த்து துணை நபியே - திங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுக்குப்பிணை நின்ற மாநபியே - இந்த
மகிதலம்புகழ் செறிவாம் நபியே
தீனுக்கு துணை எங்கள் தீன் நபியே - என்னும்
தீமைகள் அகன்றிட செய் நபியே - திங்கள்

## கல்லடிப்பதி

கல்லடிப்பதி தனிலே
கரைத்தீவு மக்கள் கூடி
கந்தூரி கொடுப்பதை நீ - பாரடி நல்ல
கந்தூரி கொடுப்பதை நீ - பாரடி
காரணக்கடலாம் எங்கள்
காதர் செய்கு ஒலியுல்லா
காவல் தேடி அப்பதியை நாடடி
நாற்றிசையும் மக்கள் கூட்டம்
நாடியநேர்ச்சைகள் கொண்டு
நன்மையுடன் வருவதைப் பாராடி
நன்மையுடன் வருவதைப் பாரடி - இங்கே
நம்பும் அடியவர்க்குறும்
துன்பமெல்லாம் போக்கும் ஒலி
நாதர்பதம் கண்டு மகிழ்வாயடி

கத்தம் பாதித்திஹா றாத்தீபு
கந்தூரி மவ்லூதோதும்
வான இசை முழங்குது - பாரடி
வான இசை முழங்குது - பாரடி
பந்தி பந்தியாக மக்கள்
சிந்தை குளிர்நேர்ச்சைகள்
பகிர்ந்து கொடுப்பதை நீ - பாரடி

சின்னஞ் சிறு மாதரசே
சிங்காரப் பசுங்கிளியே
சொல்லுவதை நன்றாய் கொஞ்சம்- கேளடி நானும்
சொல்லுவதை நன்றாய் கொஞ்சம் கேளடி
வன்பிணிகள் போக்க நீயும்
வாகாய் ஒலிபதம் செல்ல
வழுத்தினேன் சேக்க மரைக்கார்தானடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்மயில்

பல்லவி

அண்ணல் நபி பொன் மொழியே - உந்தனிரு கண்விழியே
ஆசையுடன் கேட்டுநிதம் அன்பாய் நடபெண்மயிலே - ஆசை

அனுபல்லவி

கணவனைத் தெய்வமென்று கருதியே நடந்திடுவாய்
குணமுடன் குழந்தைகளை கொஞ்சியே அணைத்திடுவாய்
இன்சனம் தன்னுடனே இன்மொழி பகர்ந்திடுவாய்
இறைவனின் தூதர் நபி இன்பமுடன் சொன்னமொழி
(ஆசை)

பக்கத்து சனங்களுடன் பண்புடன் நடந்து கொள்வாய்
துக்கமெனும் தோசமதை தூரவே எறிந்திடுவாய்
தக்கவன் சொல்மாற்றமின்றி தாரணியில் நடந்திடுவாய்
தருமதுரை எங்கள் நபி தலம் தனில் சொன்மொழி
(ஆசை)

வஞ்சகம் பொறாமைகளை வாகாய் அகற்றிடுவாய்
நெஞ்சினிலே மணிமொழியை நினைத்து நடந்திடுவாய்
வெஞ்சினத்தினை அடக்க விண்டவர்கள் நன்நபியே
தஞ்சம் தந்து காக்கும் நபி தாரணியில் சொன்னமொழி
(ஆசை)

## தொழுவோம்

பல்லவி

தினமும் தொழுவோம் இறையே - நல்ல
தீன்மறைபுர்கான் வழியே
கானமாம் சறஹதின் அமலே- எங்கள்
ஹமீம் முகம்மது செயலே - தினமும்

அனுபல்லவி

இறைவன் சொன்னான் மறைதனிலே -நன்றாய்
இலங்கிட வழி மொழி அதிலே
தரையில் மாந்தர்கள் கண்டு தினம்
தவம் செய்தால் நன்மையுண்டு - தினமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைப் பதம் பொருள் அவனே - இந்த
உலகம் படைத்தவன் அவனே
கண்ணில் காண்பவை யாவும் - நன்றாய்
கருதிப்பார்த்திடில் தோன்றும் - தினமும்

கலிமா தொழுகையும் நோன்பும் - எனக்
கருதி சதக்காவும் ஹஜ்ஜும்
நலியாசறஹது வழியே - என்றும்
நடப்பார் சுவனமாம் பதியே

## களிகம்பு

பல்லவி

கல்லடிவாழ் ஒலி நாதரின் நற்பதி
கண்டுமகிழலாம் பெண்ணே சிந்தை
கொண்டு புகழலாம் கண்ணே.

புத்தளப்பிரிவில் பொன்பரப்பிப்பற்று
புண்ணியராகக் கரைத்தீவுக்கருகில்
நற்றவருற்ற கல்லடி தறுஹாவில்
நாதர் ஒலிபதம் நங்கையே சென்று நாம்
(கல்லடி)

சரணம்

நாட்டம் நிறை வேற நாடியே
எல்லோரும் நாளும் பொழுதுமே வேண்டி
அங்கு கூட்டம் கூட்டமாக சென்று தன்
நேர்ச்சைகள் கொள்வார் பல பல கோடி - இந்த
ஏட்டிலடங்கா துயரங்கள் நீங்கவே
என்றும் உறைவார்கள் சாடி
நாட்டிலும் அங்கங்கு நேர்ச்சைகள் செய்வார்கள்
நாளும் தவறாது நாடி - இந்த

கேட்கச் சிலிர்க்கும் கறாமத்துக்கள் கேளாய்
கோதையே பண்புடன் சென்றிட நீ வருவாய்
நாட்கள் கழிக்காமல் நற்பதி சென்று நாம்
நங்கையே நாதர் ஒலி தமை காணலாம் (கல்லடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரமாகிய சேலையும் சட்டையும்
சீக்கிரமாகவே உடுத்து - நல்ல
தங்க நகைகளாய் அட்டியல் சரடு
தாள்வட மாலைகள் சூடு - நல்ல
மங்களமாகவே தோழியை சொல்லி
மணமான நேர்சையும் போடு - இன்று
பங்கமில்லாமலே வண்டியிலேறு முன்
பண்புடன் பாதிஹாஓது
தங்கும் பதியைக் கடந்திடும் வீதியில்
சங்க மடுவம் பாடசாலை நீங்கியே
சிங்காரமாகிய உப்பளம் தாண்டிப்பின்
செல்வோம் கடந்த கரை விட்டு கபுறடி

பார் சிறுகம்புகள் வெட்டி வெட்டி வந்து
பண்புடன் கொட்டுகள் கட்ட அங்கு பற்பல ஊரவர் தங்கள்
குறைகள் பகர்ந்து இறைஞ்சியே வேண்ட- சில
பாவையர் ஆடவர்தான் செய்தநேத்தியை
பட்சமுடன் நிறைவேற்ற - நல்ல
பாங்காய் வருவார்கள் செல்வார்கள் - என்றும்
பக்திபரவசமாக
கோதையே உன் குறைதனை சொல்லிட
குற்றமற ஒலிபாதந்தொழுதிட
பாதையை நேர்வழி காட்டவே கேட்டிட
பட்சம் வைத்து சொன்னோன் சேக்கமரைக்கார்

## ஓட்டுப்பள்ளிக்கூடு

பல்லவி

கூட்டினலங்கிர் தம் பெண்ணே கூடி
பார்ப்போம் வாடி என் கண்ணே ஓட்டுப்பள்ளி

அனுபல்லவி

நாட்டம் நிறைவேற்றும் நற்பதியாகிய
நாதர் செய்கு அலாவுத்தீன் ஒலியுல்லா
தேட்டமிகவுள்ள பள்ளிவாசல் துறை தேடியே
தோழியும் கூட்டிவா பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையே தற்கால நாகரீகம் போல மாறிடா
நற்பணி வோடு- நல்ல
சிங்காரமான றவுக்கையும் சேலையும்
சீர்பெற மேனியில் சூடு - நல்ல
சங்கையாய் நீயும் பவுடரைப் பூசியே
தன்னினம் போல் வழிசேரு - நல்ல
பங்கமில்லாமல் நற்பாதையைத் தேடியே
பண்புடன் சென்று நீ பாடு
கூட்டங்கள் மத்தியில் கோதையே போகாதே
கும்மாளம்போடும் குழுவதில் - சேராதே
நாட்டம் நிறைவேறா நாதர் ஒலிபதம்
நன்னைமாய் சென்று நீ நற்பதி கண்டிடு

நங்கையே தன்மனை தன்னைக் கடந்த பின்
நாச்சிகள்ளி யதைப்பாராய் - இங்கு
நாகரீகமாய் மணல் மேடு நீங்கியே
நல்ல பெரம்படிபாராய் இங்கு
செப்பிடும் இவ்வேளைபோக்கடி நீங்கிப்பின்
சென்று பூவற் குளம்பாராய் - நல்ல
சீரான வீதியில் வாகனங்கள் போகும்
சிங்கார வேகத்தைப் பாராய்

மங்கையேமெல்ல அருகினில் வாவடி
மாண்புயர் தர்ஹா கொடி மேலே பாரடி
மங்களம் இலங்கும் பள்ளியதின்
மாட்சிமை தங்கிடும் காட்சிகள் பாரடி - கூட்டி

சிங்காரமாகிய வெட்டவெளிதனில்
சேர்ந்திடும் மக்களைப் பாராய் - அது
சீர்பெற பஸ்ஸிலும் காரிலும் சேமமாய்
செய்யும் விஜயத்தை பாராய் - இவர்
தங்கிடநல்லிடம் தேடித் தேடிச்சென்று ஜோராய்
சார்வார்கள் ஒன்றாக

இங்குமருவிய ஊரவர் வண்டியில்
இன்புறும் சோடிகள் - பாராய்
மங்களமாகிய கீதம் முழங்குது
மத்தாப்பு தீவட்டி வானம் ஜொலிக்குது
தங்கரதம் போல கூடுவருது சாற்றினேன்
சேக்கமரைக் காயர்பாவிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமணமே

புதுமணவாளர் பவனியதே - இந்த
புவியதில் நிறையழகே
பூரணவடிவாய் திருமணம் புரிய
போகும் நடையழகே

பெற்றவர் நாடி உற்றவர் தேடி
பேசிய திருமணமே - நல்ல
பேணி மகிழ்வாய் நாளைக் குறித்து
புரியும் திருமணமே - புதுமணவாளர்

கொற்றவன் வடிவாய் கோமள அழகாய்
கொள்ளும் திருமணமே - தினம்
கூட்டம் கூடி வாழ்த்துகள் பாடி
குலவும் திருமணமே - புதுமணவாளர்

பாவையர் சேர்ந்து பற்பல முறையில்
பிரியம் தொடுத்திடவே நல்ல
பாசம் கொண்டு பண்புகள் பலதும்
பகரும் திருமணமே
மணமகன் மனதில் மகிழ்வுறும் எண்ணம்
மலரும் திருமணமே - சொந்த
மணமகள் கண்டு மாங்கல்யம் தரித்து
மகிழும் திருமணமே - புதுமணவாளர்

## தாலாட்டுப்பாடல்

ஆலம்படைத்தவனே அவனிதனையாள்பவனே
தாலாட்டுப் பாடுதற்குத் தந்திடுவாயுன் அருளை.

இறைவா நீ எங்களுக்கு இன்பமுடன் தந்த செல்வம்
நிறைவான வாழ்வு தர நித்த முனை வேண்டுகிறேன்.

வெள்ளைக்கயிறெடுத்து விரிவான தொட்டில் கட்டி
வில்லைத்தலையணையில் வீரமகன் நித்திரை செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துமாதம் சுமந்து பாரதனில் கஷ்டமுடன்
பெற்ற அன்னை தாலாட்ட பேரரசே நித்திரை செய்.

பால் கேட்டழுகிறதோ பசிக் குணவு கேட்கிறதோ
தாலாட்டச் சொல்கிறதோ தவக்கொழுந்தே நித்திரை செய்.

தந்தை அடித்தனரோ தாய்மாமன் பேசினரோ
பந்தமுள்ளோர் வைதனரோ பாலகனே நித்திரை செய்.

சின்னஞ்சிறு சிற்றெறும்பு சிவந்திருக்கும் மூட்டைகொசு
இன்னலுறக் கொட்டினதோ இன்பமகன் நித்திரைசெய்.

மல்லிகை தன்மலரே மணமிகுந்த ஷண்பகமே
முல்லைமலரே முகமலர நித்திரைசெய்.

செந்தாமரை மலரே சிவந்த மல்லிகைமலரே
பந்தபாசம் ஒன்றுசேர்க்கும் பாலகனே நித்திரைசெய்.

கட்டிக்கரும்பே கனகமணிப் பெட்டகமே
மட்டிலா மகிழ்வுதந்த மாமணியே நித்திரை செய்.

கற்கண்டே சர்க்கரையே காவிலுறும் தேனமுதே
கற்பகமே என்னுடைய கனிரசமே கண்ணுறங்கு.

கண்ணே கருமணியே கணக்கறியா ஆணி முத்தே
பொன்னே புவிமணியே புத்திரனே நித்திரைசெய்.

கூவி அழாதே கண்ணே கொவ்வையிதழ் உன்மேனி
நாவும் சிவந்திடுமே நன்மகனே நித்திரை செய்.

பிள்ளையில்லையென்று பெருந்தவங்கள் செய்து
எந்தன் பிள்ளைக்கெலி தீர்க்கவந்த பேரரசே நித்திரைசெய்.

அன்னை உன்னைத் தாலாட்ட அரியணையில் நீதுயின்று
கண்ணே அதிகாலை கண்விழிப்பாய் என்மகனே.

முல்லைச் சிரிப்புடனே முகமலர நீ யெழுந்து
பல்லை விளக்கி முகம் பாலகனே நீ கழுவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவித்துடைத்த பின்பு கண்ணே புது உடையை மகிழ்வாய்
எடுத்தணிந்து மாதவமே நீ வருவாய்.

காலைக்கடன் முடித்து கடவுள்தனைத்தான் தொழுது
வேளை உணவருந்தி விரைவாய் படித்திடவே.

பாடசாலை சென்று பக்குவமாய் ஆசனத்தில்
பாடம் படித்திடவே பாலகனே நீ இருப்பாய்.

அன்பாக உன்னை அரவணைத்து ஆசிரியர்
இன்முகமாய் பாடம் சொல்ல இசைந்து படி என் மகனே.

அன்புக்கிள்ளை வாய்திறந்து அழகுடனே தான் படித்து
உன் வகுப்புத் தோழரோடு ஓடி இல்லம் வந்திடுவாய்.

அன்பு மகன் தன் வரவை ஆவலுடன் நான் பார்த்து
பண்புடனே பாதிவழி பறந்து வந்து தூக்கிடுவேன்.
தூக்கி அணைத்திடுவேன் சொரிய முத்தம் தந்திடுவேன்
நோக்கிடுவேன் உன்வதனம் நுகர்ந்தகுறை நீக்கிடுவேன்.

பாலகனே நீ படித்து பட்டம் பெற்று வாழ்வதற்கு
மேலவனை வேண்டுகிறேன் மேதினியில் உன்தாயே.

ஆதிபரம் பொருளே அகிலமெல்லாம் வாழ்பவனே
சோதியே என் பாலனுக்கு சொரிந்திடுவாயுன்னருளை.

சந்ததமும் நேரும் குறை தான் பொறுக்கத்தாலாட்டில்
செந்தமிழால் கேட்டிடுவோன் சேயன் சேக்காமரைக்கார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நா. மு. அசனா மரைக்கார்

நா.மு அசனா மரைக்கார் பள்ளிவாசல் துறையைச் சேர்ந்தவர். இவர் ஒரு களிகம்பு அண்ணாவி. இவர் இப்பிரதேசத்திற்குரிய ஏராளமான களிகம்பு பாடல்களை மனனம் செய்து வைத்திருந்தார். பாடல்களை பாடுவதிலும் அவருக்கு திறமை இருந்தது. அத்தோடு களிகம்பு ஆட்டத்திற்காக புதிய பாடல்களை இயற்றுவதிலும் திறமை காட்டினார். அவர் சுயமாக சுமார் இருபதிற்கு மேற்பட்ட பாடல்கள் பாடியிருந்தும் இன்று எதுவும் கிடைக்கும் நிலையில் இல்லை. இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்தவர்.

புத்தளப் பிரதேசத்தில் பள்ளிவாசல்துறைக்கிராமத்தில் இருந்த செய்யது ஹாஜா செய்கு அலாவுத்தீன் ஒலியின் சிறிய தர்ஹாவை கல்பிட்டி, சீமான் சைமன் காசிச்செட்டியின் பரம்பரையினைச் சேர்ந்த ஒரு செட்டி, பெரிய தர்ஹாவாகக் கட்டிக் கொடுத்ததை இப்பாடல் கூறுகிறது. ஒலியின் மீது அவருக்கிருந்த நம்பிக்கை யினால் தர்ஹாவைப் பெரிதுபடுத்தி அதற்குக் காணிகளும் வழங்கினார். 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்த இச்சம்பவத்தையே இப்பாடல் கூறுகிறது.

### வேந்தரின் தர்ஹா

பல்லவி

காரும் காரும் என்னைக்காரும்
காத்துக் கருணை செய்வீரே தினந்தோறும்

அனுபல்லவி

கெட்டு மெலிந்து வந்த செட்டி தன்னின்
கேட்டை நிவர்த்தி செய்து மீட்டி
அட்டியில்லாமலவன் சுட்டி - தங்கள்
ஆலயம் தன்னை நின்று கட்டி
வெட்டினான் குளமுமொன்று
கட்டினான் கிணறு ரெண்டு
விட்டுக் கொடுத்தான் பூமி
வேந்தரின் தர்ஹாவுக்காய் (காரும்)

வந்து உதித்தீர் இந்தத் தலத்தில்
வரிசை வாழ்வு பெறவே இப்பூதலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழப் பெண்கள் வயிற்றில் - செல்வர்
சீராய் பெறவே இந்த மாநிலத்தில்
நித்தமும் தறுஹாவந்து
நிம்மதி பெறவெ நின்று
நேர்த்திகள் கொடுப்பார் நன்று
வேந்தரின் பாதம் பணிந்து (காரும்)

மக்கா நபியுல்லா தன் வழியால்
மன்னரலிப்புலி கண் மகவாய்
ஹக்கன் ஹஸன் ஹுஸைன்
கண்மணியா எங்கள்
கௌது முகிய்யதீன் பொன் மணியாய்
எக்குத்தமு மணுகா அப்துல் வஹாபு தன்னின்
மக்கள் தலைமுறையும்
வாழ்ந்திடும் ஷம்சுதீன் மகவே (காரும்)

பிறந்தது பாலாப்பூரில் தாமே
பல்கில் பிந்தாரசு புரிந்தோராம்
உறைந்திடும் தலமும் ஐந்துடனாறாம்
உமை உவர்ந்தவர்க்கு உதவும் தவப்பேறாம்
சிறந்திடும் பள்ளிவாசல்துறை ஷெய்கு அலாவுதீனே
பகர்ந்திடும் முகம்மது அசனை
பட்சம் வைத்து அனுதினமே (காரும்)

## மீ. ஹபீபு முஹம்மதுப்புலவர்

இவர் முசலியைச் சேர்ந்த கவிஞர். இவரை முசலி மக்கள் 'காவியப்பா' என அழைத்தனர். 1921ஆம் ஆண்டு முசலி அளவக்க சிறுகுளத்தில் பிறந்தார். களிகம்பு ஆட்டங்களுக்குப் பாடுவதிலும் பாட்டியற்றுதிலும் அவர் புகழ்பெற்று விளங்கினார். அத்தோடு, இஸ்லாமிய இலக்கிய அறிவும் அவருக்கு இருந்தது.

1990ல் வடபகுதி முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டு புத்தளம் பிரதேசத்தை வந்து சேர்ந்தபோது இவர் கல்பிட்டியூடாக குறிஞ்சிப்பிட்டி கிராமத்திற்கு சென்று ஒரு அகதி முகாமில் வாழ்ந்து வந்தார். 1990ல் இப்புலவரை இந்நூலாசிரியரும் அவரின் நண்பருமான கால்ம்சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியர் எம்.எச்.எம் ராஸிக் அவர்களும் அவரது முகாமில் சந்தித்து உரையாடியதோடு முசலியிலிருந்து மக்கள் கல்பிட்டி புத்தளம் பகுதிகளுக்கு வந்த துயரக்கதையை வழிநடைச் சிந்தாக்கி தருமாறு கேட்டுக் கொண்ட போது கீழ்வரும் பாடல்கள் புலவரினால் இயற்றித் தரப்பட்டது. 1991 ஜுலை மாதம் 5ம் திகதி இப்பாடல்கள் நூலாசிரியரின் கைகளுக்கு கிடைத்தன.

எமது சந்திப்பின் போது சீறாவுக்கும், இராஜநாயகத்திற்கும் பழைய பாணியில் பொருள் உரைத்தும் காட்டியதோடு யானைக் காதல் பாடலிலிருந்து சில பகுதிகளையும் பாடிக்காட்டினார். பின்னர் பள்ளிவாசல்துறை அகதிமுகாமில் வாழ்க்கையை ஆரம்பித்து 2000ஆம் ஆண்டு காலமானார்.

## அகதிகள் வாட்டம்

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

பொன் பூத்த மறை நான்கின் முன்னே ஆதி
புகழ் பூத்த நபிமார்கள் ஒலிகள் மீதும்
தண்பூத்த ஒளிர்வதனம் தளர்வு குன்றா
தகைமையுறும் அவுலியாக்கள் பாதம் போற்றி
ஒண்பூத்த ஆரிபீன்கள் உலமாமற்றும்
உபநிடதத் தமிழ்ப்பாவின் பிழைபொறுத்து
மண்பூத்த கலைஞர் கவிவாணர் மீதும் மாகருணை
தந்தருள்வீர் யாமுகையத்தீனே.

ஆதியஹதாகி சமதானவன்
அரிய வேதத்தின் உட்பொருளாய்
சோதி றஹ்மத்து உள்ளவனே
துலங்கும் ஈரேழு உலகம் எல்லாம்
கோதிலாமலே நிறைந்திரணம்
குறையா உணவளித்துக் காப்பவனே
நீதி நெறியையும் ஈமானையும்
நிலையாக என்றும் தந்தருள்வாய்.

பாராய் பயங்கரமாதே - அதைப்
பார்க்க முடியாது கோதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரான மன்னார் முசலி முசலீங்கள்
சீவனுக்குப்பயந் தோடிச் சிதறியே
வாராய் நீ ஆமியின் கேம்பிலடைக்கலம்
வந்து குவிந்தங்கு சிந்தை கலங்கியே (பாராய்)

பண்டைய காலத்துப் பண்டார வெளியார்
பாய்ந்து நடப்பதைக் கண்டு -அடுத்துப்
பாதகமில்லாமணற்குளத்தார்கள்
பசிதீரக் காலையில் உண்டு- மிக்கக்
கண்டவரஞ்சிட மேத்தன்வெளியார்க்குக்
கடுநடையாகவே சென்று - ஒரு
காலமும் இல்லாத கற்பனையாமிது
கலங்கவேண்டாம் பெண்ணே- என்று -சொல்லி

வண்டிலும் மாடும் வளவுடன் தோட்டமும்
வயற்காணி நெல்முடை வைத்த நகைகளும்
கண்டிதமாகவே போனாலும் போகட்டும்
கட்டடி பொருள்களைப் பொட்டணியாகவே. (பாராய்)

அன்புமிகுந்த அளவக்கைச் சிறுக்குளத்
தவர்களும் ஒன்றாகக் கூடி - முசலியூர்
ஆதரவாளரும் வாரீர்வெளியூரார்க்
கறியப்படுத்துவோம் வாடி- நீயென்று
முன்பாயிருக்கும் புதுவெளிபூநொச்சி

முறையுடன் கூப்பிட நாடிச் - சிலர் தண்கொள் வனத்தினிற்
சார்ந்து நீ போகாமல்
தங்குவோம் கேம்பினில் ஓடிச் சென்று
கேம்பினில் தங்கினால் கேவலம் வாராது
கிட்டுமான இடம் சிலாபத்துறை நகர்
தேம்பி யழுது தியங்கி மயங்கியே
தேவனுதவியால் வந்து குவிந்தனர். (பாராய்)

அரச பணிசெய்யும் ஆமிப் பெரியோனின்
அடிபணிந்தே நாங்கள் கேட்டோம் - எங்களை
அநியாயம் செய்கிறார் புலிப்படைக் கூட்டங்கள்
ஆட்சிபுரியவே நாட்டம் என்று - சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமனருளினால் பயமும் பசியுடன் எங்களைப்
பாதுகாக்கும்படி தேட்டம் வைத்துச் - சொல்ல
பாய்ந்து பலதிசை சுற்றியே ஆமி
பதுங்கி யிருந்தனர் வாட்டம் - கொண்டு
முரசு ஒலிச்சத்தம் கேட்கவே மாலையில்
மோசம் வரப்போகுதோ நாசமாய்ப்போவானால்
அரசுதனை நம்பி அநியாய மாச்சுது
அல்லாதுணை என்றெல்லோரும் நேர்ந்தனர் (பாராய்)

மாட மணிப்புறா கூவுங் குயிலினம்
வந்து மரத்திலே நிறைந்து - நம்மள்
மாதா பிதாவுள்ள காலம் வரையிலும்
வாழ்ந்து சுகித்த நாம் பறைந்து -இன்னும்
காடைகவுதாரி கிள்ளை சாரிகை

கண்கலங்கி நின்று உறைந்து - எப்ப
காணுவோமென்று கதைபாடிப் பட்சிகள்
கலைந்தோடிப் போனதை யறிந்து - முன்னுள்ள
சாடையறியாத சண்டாளராணுவம்
சந்தியிலே வந்து சென்றி போட்டாலுமே
ஆடையணிபல சாமான் நனைந்துமே
அண்டிச் சயனிக்கத் திண்டுகள் இல்லையே.

இரவுமுழுதுமே கரவன் வருவானென்
றெண்ணி யெல்லோருமே நினைந்து - நன்றாய்
எப்படி நாங்க ளிதைவிட்டு ஏகியே
எங்காகிலும் போவோம் முனைந்து - பல
சிரமமில்லாமலே போட்டுகள் வந்தால் போய்ச்
சேரலாம் கற்பிட்டி வனைந்து - என்றும்
குரவையிடுங் கடல் தரவையில் வந்துமே
கூப்பியே நின்றனர் புனைந்து
திரவியம் போலவே திரளான மக்களும்
எந்தத் தேசம் போவோமென்றெண்ணிமயங்கியே
பரமனருள் பொங்கும் குதிரை மலையப்பா
பங்கமிலாதொரு வங்கமனுப்பினார். (பாராய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டில் வந்து இறங்கியே கற்பிட்டி
புத்திவானுள்ள நல்லூராம் - அங்கு
ஜாட்டிலிருக்கும் நேவியறிந்து
என்னசங்கதி யென்ற னராம் - என்ன
கோட்டி நடந்த துவர்க்கம் வரையிலும்
கோணிலறிவித்தார் சீராய் - எங்கள்
நாட்டினிலுள்ள முஸ்லீங்கள் யாவரும்

நாடு கடந்தனர் பாராய் -அவர்
தாட்டிகமாகவே அரசிடம் கேட்டொரு
தாமதமின்றியே பாமர ஜனங்களை
காட்டினில் ஓடியே காணாமல் போகுமுன்
கண்போட்டனுப்பினர் தென்பட்டுப்போனது.

கொம்பன்சுறாவும் கொடுவாய் பறவைமீன்
கூட்டமாகக் குதி பாய்ந்து - நல்ல
செம்பொன் நிறமுள்ள கட்டா அறுக்குளா
சேரி கருங்கண்ணி மேய்ந்து - பல
உம்பன்மீன் கம்புபோல துன்பமில்லாமலே
ஓடித்திரளாகச் சாய்ந்து - சிலர்
வெம்பிமுகம் வாடி தும்பிபோல் போட்டெலாம்
வீரமாய்ப் போவதை ஆய்ந்து

பைம்பொன் மலைச்சார்பில் பாய்ந்து ஒதுங்கியே
பார்க்கடல் விட்டேகி மேற்குத்திசை நாடி
எம்பிரானை நம்பி ஓடுவோம் வாருங்கள்
என்னதான் செய்வோமோ வண்ண மடமாதே. (பாராய்)

தாராபுரம் தாழ்வு பாடு தலைமன்னார்
தங்கும் எருக்கலம் பிட்டி - நல்ல
தாராளமான மன்னார் கரிசலும்
தக்க புதுக்குடி யெட்டி - நட
காரசாரத்துடன் புலிப்படை யாக்கினை
கண்ட படியாக முட்டி - ஊரில்
பாரதூரமாக எல்லை விட்டோடுங்கள்
பலஊரும் பிரசித்தம் ஒட்டி
தீராத வெஞ்சம் திடுக்கிட்டெழுந்தோடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து வைத்த காசும் தங்கப்பூ மாலையும்
பேரான போட்டும் கடைகளும் தோட்டமும்
பிந்திவந்தால் பார்ப்போம் சிந்தை மகிழ்ந்துவா
ஐந்து தென்னைமரம் அழகான தோப்புக்கள்
அங்கு எல்லோரும் கூடி - நல்ல
ஆத்திரமாகவே கோத்திரத் தார்களும்
ஆனகடற்கரை நாடி
சிந்தும் மழைத்துளி குந்த இடமின்றிச்
சீரழிவான் புலி ஓடி - வந்து
தந்திர மாகவே தாலி நகைகளும்
தந்து விட்டுப் போங்கள் - கோடி
சந்தியிலே வந்து தட்டிப்பறித்துமே
சாமான்களெல்லாமே சோதனைசெய்துமே
நிந்தனை செய்யாமல் போட்டினிலே யேறியே
நேரான கற்பிட்டி பூராவும் வந்தனர். (பாராய்)

கற்பிட்டி கண்டு கரையேறி வந்தபின்
கவுண்மேந்து பாரமும் எடுத்து - எங்கும்
கட்டாயமாகவே ஒவ்வொரு ஊரிலும்
கட்ட வேண்டும் கேம்பு அடுத்து
புல்பிட்டி மேட்டிலே கண்டு வழிநீங்கிப்
போகின்ற பாதையை விடுத்து - குறிஞ்சிப்
பிட்டி வழிச்சந்தி இந்தாவருவது
கூடி நடந்துவா தொடுத்து
நற்புத்தி கூறிடும் கண்டக் குழி நகர்
நாள் தோறும் வேத விரிவுரை ஓசையும்
கற்புங் கலையும் கரையிலா தோங்கவே
காணரிதாகிய ஆணம்மிருந்தனர். (பாராய்)

கண்டக் குழிகண்டு ஓடி நடந்துவா
கடலோர மாகவே பாராய் - நல்ல
கட்டு மரங்களும் கைத்தோணி போட்டும்
கரையேற்றி வைத்திடும் சீராய்
விண்டிடும் சம்மாட்டி வாடியைக்கண்டு நீ
வேகமாகப் பார்த்துக் கூராய் - அங்கு
அண்டின பேருக்கு ஆதரவாளர்கள்
அங்கே யிருக்கும் அவ்வூரார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டு நறையுண்டு பாடிடும் சங்கீதம்
வசந்த பூங்காவனத் தெங்கினச் சோலையும்
நின்று உரைக்கவே நேரம் சுணங்குது
நீதமுடனே நம் வேதமே ஓதிவா. (பாராய்)

உள்ளமகிழ்வுறும் பள்ளிவாசல் துறை
ஓங்கியிருப்பதைக் கண்டு - பல
ஊதா நிறமுள்ள பச்சைக் கொடிகள்
உண்டான தென்னமோ விண்டு - அது
வள்ளலொலி செய்கு அலாவுத்தீன் நாதரின்
வாசமுறுந்தல மென்று - அங்கு
வாதையுடன் வந்து பாதம் பணிந்தோர்க்கு
வன்பிணி நோய்க ளகன்று
கள்ளமில்லாத கதிரவனைக்கண்ட
கான்பனியோடிக் கலைவது போலவே
எள்ளள வேனும் பிசகாக் கருணையார்
இத்தலம் பார்த்து நீ சித்தம் மகிழ்ந்துவா. (பாராய்)

வன்செயலுற்றதால் புன்கவி தன்னையே
வழிநடைச் சிந்தாகப் பாடி - அதின்
வரலாறு தன்னிலே தகராறிருந்திடில்
வல்லவ னேயுன்னை நாடி
முன்னுள் ளிலக்கணம் தொல்காப்பியம் நன்னூல்
முற்றும் அறியாத பேடி - திரு
நன்னபி பாதம் பணிந்து இறைஞ்சினேன்
எந்நாளும் கவிதையைச் சூடி
விக்கினமில்லாமலே எம்மனைவோரையும்
விரும்பியே கேட்கின்றேன் பதினான்கு இல்மையும்
சொன்னான் ஹபீபு முகம்மதுப் பாவலன்
சுற்றமெல்லாங் காத்து நற்றவம் தந்தருள்
(பாராய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பிட்டி வந்தோம்

### கும்மி மெட்டு

ஓடங்கள் மீதினில் ஏறியே -எல்லோரும்
ஒன்றிலும் நாட்டமில்லாமலே
கூடிக்கடல்வழி யேகியே - வந்து
குணமுள்ள மனிதர்கள் வாழ்ந்திடும்.

கற்பிட்டி யென்னும் நல்லூரிலே - உள்ள
கரையில் இறங்கியே யாவரும்
பொற்புள்ள வாகன மீதிலே - தங்கள்
பொருட்களை யேற்றிக் கொண் டேகினார்.

ஏகியே கற்பிட்டி நரிக்குடா - அங்கு
இன்னலை நீக்கும்பள்ளி வாசல்துறை
வாகுறுங் குறிஞ்சிப் பிட்டி தன்னிலும் - இன்னும்
வழுத்திடும் நீர்கொழும் பேத்தாளை.

தேளியா லங்குடா புத்தளம் - பூலாச்
சேனை கரம்பையும் பாலாவி
சூழும் வளங்கொள் வண்ணாத்தி வில்லும் - நல்ல
சுகுண ருறுங்கரைத் தீவினிலும்

இன்னும் பலபல ஊர்களிலே - முஸ்லிம்கள்
ஏகியே தோட்டங் காடுகளில்
பின்னுங் கிடுகினாற் குடிசைகளைக் - கட்டிப்
பெண்சாதி பிள்ளைகடோடிருந்தார்
வேதனையுற்றுத் தினந்தோறும் - ஒரு
வேலையுமில்லாம யேலயடைந்து
சோதனை காலம் நமக்குவந்து - இந்த
துன்பப்படுகிறோம் என்றேங்கி
பிறந்து வளர்ந்து சுதந்திரமாய் - என்றும்
பிரியாம லேகுடி யாயிருந்த
சிறந்த நல் லூரைவிட்டோடவைத்தோர்- பெருஞ்
சேதமடைந்து கெடுவாரே
இருபத்து நாலுபத்துத் தொண்ணூறில் - நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் ஊரைவிட்டோடியதால்
மறுபத்துத் தொண்ணூற்றி ஒன்றிற்குமுன் -ஊரில்
வந்திடச் செய்குவாய் வல்லவனே

வல்லவனே யுன்தன் சோதனையால் - இந்த
வன்செய லெல்லா மொழிந்திடவே
ஒல்லையிலேகுடி யேற்றிவைப்பாய் -என்றும்
உள்ளவ னேபெரும் வல்லவனே

கற்றறி யாதகலை வல்லோன் - எம்
ஹபீபு முகம்மதுப் பாவலனின்
குற்றம் பொறுத்துக் குறைதீர்ப்பீர் - எங்கள்
குதுபு முகையதீன் ஆண்டகையே.

-ஓ-

## அப்துல் மஜீது புலவர்

அப்துல் மஜீது புலவர் இராமநாதபுரம் கீழக்கரையைச் சேர்ந்தவர். இவர் வள்ளல் சீதக் காதி மரைக்காயரின் வழித்தோன்றல் என குறிப்பிடப்படுகின்றது. கீழக்கரையில் உள்ள பெரிய வித்தியாசாலையில் இவர் கல்வி கற்றார். அதன் தலைமை பண்டிதர் குத்துபுத்தீன் ஸாஹிபிடம் அறபு, மற்றும் தமிழ் மொழிகளை கற்றுத்தேர்ந்தார். இவருக்கு வர்த்தகத்தில் அதிக நாட்டம் இருந்ததால், வியாபாரத்தில் தீவிரமாக ஈடுபட்டதோடு இலங்கையோடும் வியாபார தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டதோடு இப்றாஹீம் நெய்னா புலவரோடு சேர்ந்து தனது இலக்கிய அறிவையும் வளர்த்தார்.

1930ம் ஆண்டளவில் இவர் மன்னாரிலிருந்து கல்பிட்டிக்கு வந்துள்ளார். கல்பிட்டியில் புகழ்பெற்ற முஹம்மது தம்பி மரைக்கார் என்ற செல்வந்தருடன் அவருக்கு தொடர்பு ஏற்பட்டது. முஹம்மது தம்பி மரைக்காரிடத்தில் இலக்கிய ஆர்வமும் புலவர்களையும் கல்விமான்களையும் ஆதரிக்கும் பண்பும் இருந்தது. பனைக் குளம் அட்டாவதானம் அபூபக்கர் நெய்னாபுலவர் இலங்கை யில் பயணம் நிகழ்த்திய போது அவர் கல்பிட்டிக்கும் வந்திருந்தார். மரைக்கார் அவரிடம் சீறாபுராணத்திற்கு நல்ல விளக்கவுரை எழுதும்படியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகும் செலவு அனைத்தையும் ஏற்றுகொள்வ தாகவும் வேண்டினார். எனினும் அப் புலவர் நாடு திரும்பிய சில காலத்தில் மரணித்ததால் அக்கோரிக்கை நிறைவேறவில்லை.

இக்காலத்தில் அப்துல் மஜீது புலவர் 50க்கும் மேற்பட்ட கீர்த்தனங்களை நபிகள் பெயரில் இயற்றி இருந்தார். எனினும் அவற்றை அச்சேற்றுவதற்கு அவரிடம் பணவசதி இருக்கவில்லை. இதனை அறிந்த முஹம்மது தம்பி மரைக்கார் புலவருக்கு நல்லாதரவு வழங்க முன்வந்தார். புலவர் தான் பாடிய கீர்த்தனங்கள் சிலவற்றில் முஹம்மது தம்பி மரைக்காரின் பெயரையும் இணைத்து பாடி தனது நன்றியறிதலை புலவர் வெளிப்படுத்தினார். பின்னர், முஹம்மது தம்பி மரைக்காரின் ஆலோசனைக்கிணங்க அப்துல் மஜீது புலவர் **ஆசாரக்கோவை** என்ற 100 கட்டளை கலிபாக்களை உள்ளடக்கிய செய்யுள் இலக்கிய நூலொன்றை உருவாக்கினார். இது இஸ்லாத்தின் ஒழுக்க இலட்சியங்களை செய்யுள் முறையில் எடுத்து கூறியது. சன்மார்க்க நெறியும் மனித வாழ்வுக்கான பண்பு நலன்களும் புலவரினால் ஆசாரக்கோவையில் பேசப்பட்டது. இச்செய்யுள் ஒவ்வொன்றினது இறுதி வரியிலும் முஹம்மது தம்பி மாமரைக்காய சகாயனே என்று மரைக்கார் மீதான தனது அன்பை வெளிப்படுத்தினார்.

அவர் பாடியுள்ள நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான கீர்த்தனங்கள் நபிகள் மீதான அன்பையும் பக்தியையும் வெளிப்படுத்தும் ஓசை நயம் கொண்ட இனிய பாடல்களாக அமைந்துள்ளன.

இவர் இலங்கையில் இருந்த காலத்தில் கொழும்பு, மன்னார், கல்பிட்டி திகழி போன்ற பல இடங்களில் சீறா படித்து, அதற்கு பொருள் சொல்லுதல், மார்க்க உபந்நியாசம் செய்தல், மௌலூது மற்றும், களரிகளில் பதம் பாடுதல் போன்றவற்றில் ஈடுபட்டு இப்பகுதி மக்களுக்கு *மார்க்க உணர்வையும் இலக்கிய உணர்வையும்* ஏற்படுத்தி வந்தார்.

**திகழி**

அப்துல் மஜீத் புலவர் கல்பிட்டியில் வாழ்ந்த காலம் ஐந்து வருடங்களுக்கும் குறைவானது. அங்கு அவருடைய வாழ்க்கை பற்றிய விபரங்கள் தெளிவானதாக இல்லை. அங்கு ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக திகழி (தேளி) என்ற கிராமத்திற்கு வந்தார். அங்கு ஏழு கிராமங்களுக்கு மரைக்காராய் இருந்த அலித்தம்பி மரைக்காருடைய ஆதரவை பெற்று சுமார் இருபது வருடகாலம் அவ்வூரிலே வாழ்க்கை நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் தேளி மௌலூது மற்றும் கூடு கொடியேற்றம் போன்ற கலாசார நிகழ்ச்சிகளை அதிகம் பெற்றிருந்தது பதம் பாடுவது, சீறாப்படிப்பது போன்ற இலக்கிய நிகழ்ச்சிகளும் அதிகமாக நடைபெற்றன. புலவர் தொடர்ச்சியாக ஈடுபட்டார். தேழியை சூழ இருந்த பலக்குடா, கண்டல் குடா, முதலைப்பாழி, ஆலங்குடா, நுரைச்சோலை போன்ற ஊர்களின் கந்தூரி மௌலூது, கொடியேற்றங்கள் போன்ற வைபவங்களுக்கும் அவ்வூர் மக்களால் அழைக்கப்பட்டு அங்கு பதம் பிடிப்பதிலும், சீறாப்புராணத்திற்கு உரைநயம் சொல்வதிலும் ஈடுபட்டார். இவரின் இம்முயற்சிகளுக்கு அலித்தம்பி மரைக்கார் பூரண உதவிகளை வழங்கினார்.

1950ஆம் ஆண்டளவில் தனது 70வது வயதில் தேளி (திகழி) கிராமத்தில் காலமானார். அவர் தேளிப் பள்ளிவாசலின் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டார். இங்கு இடம் பெற்றுள்ள இருபாடல்களும் இப்பிரதேசத்தில் களிகம்பு பாடல்களாக இன்றும் பாடப்பட்டு வருகிறன.

## சங்கையபானவர்

மின்னேநான் என்னா செய்குவேன் அண்ணல் நபியே
மின்னேநான் என்னாசெய்குவேன்
இன்னமும் காணாமல் நெஞ்சில் எண்ணமோபெருகுதடி
(மின்னே)

தந்தை முதுகிலிருந்து அந்தம்மிகுந்து தாயின்
குவளறையில் போய்ப்பதிந்து
வந்த விந்தையறிந் திலேனே
நிந்தனையான வேலையும் விலைமகளின் லீலையும்
செய்தேன் எந்நாளும்
புன் சொன் மிலையன்நானே
சஞ்சலங்களை பொறுக்க முடியுதில்லை
நிறுத்தக்கூடாத தொல்லை பூமானுரைத்திடும்
நேம மடுத்திலனே
பூவியின் மிசை காமமிகுத்தவர்
வானமெனத்திரு சேமமெனதிரு
நாம முரைத்திலன் (மின்னே)
கல்லாத மட மதியே நல்லவர் சொல்லைக்
காதிலும் கேளாமல் அந்தப் போதிலும்
பொய் பேசுகின்ற பொல்லாத வீணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறியன் ஆனாலும் அவர்பொருந்தும் படியே என்று விருந்தும்
படியேயிவையெல்லாம்
அறிந்து சொல்லடி அவரையெல்லாம்
ஏழைக்குதவி செய்யும் வேளைக் கிருபையோர்கள்
எங்கும்மிகுத்தவர் சங்கை மிகுத்த வராம்
மங்கையே யின்னும் மங்குல் குடை தங்கும்
அலங் கிர்தமங்கள எங்கள் முகம்மது (மின்னே)

கன்னல் மொழியும் போதிலும்
அன்ன மிருந்து களிக்கும்
கமலமலர்செழிக்கும் தண்ணீர் தடமும்
செந்நெல் விளையும் வயலும்
எண்ணில் நிறைந்தசோலை அருள்
மதீனா கோழுவிற்தருள் புரியும்
செஞ்சொற்கவிதைப் புகழும்
சின்னஞ் சிறியன் சீசன்
அப்துல்மஜீது தாசகர்குதவி செய்து
சித்திர மாகிய நித்திலமாகியவர்
ஜெபறூத்தின் முத்திரையே
உலகத்துவராகிய உத்தமரோத
சத்திய நாயகர் (மின்னே)

## தங்கத் தாமரை

தங்கத்தா மரைமலர் அடியான் சோபன நாயகர் மஹ்மூதே
பங்கந்தங் கும்பங்கள் சங்கந்தங்கும்படிபடிதோயா
(தங்கத்தாமரை)

.......................... .................................. ......................................
.......................... .................................. ......................................

மஞ்சஞ்சும் பஞ்சமென வஞ்சிய ரஞ்சன விழிகண்டு
மனநிலை புரடற பிசகிட மதரிம் மருள் மயல் கொண்டு கொஞ்சம்
புண்வஞ்சகமும் பல கூறிநடந்ததின் பின் சென்று
குங்கும மங்கள பங்கையங்கள் செறிந்திடும்
கொள்கை பிணைந்தலை யாநின்று
பங்கந்தங் கும்பங்கள்
சங்கந் தங்கும் படிபடிதோயா
(தங்கத்தாமரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்பூங்கா வின் வாவிகள் பலவளமக்கப் பரிபாலா
பாத்திகேசரி அப்துல்லா திரு நேத்திரமாகிய தவபாலா
பண்ணிசைக்கும் மெண்டிசைக்கும் பலனருள் பெருகிய ஜெயசீல
அஞ்சரி கீர்த்தனம் மஞ்சரிபாடிய அப்துல்மஜீதுக்கனுகூலா பங்கந்தங்
கும்பங்கள் சங்கந்தங்கும்
படிபடிதோயா

(தங்கத்தாமரை)

-ஃ-

## உசனார் லெப்பை

இவர் கண்டற்குழியை பிறப்பிடமாக கொண்டவர். இவர் முன்நூறிற்கும் அதிகமான கோலாட்டப்பாடல்களை மனம் செய்து வைத்திருந்தார். கோலாட்ட குழுவினர் இவரிடம் வந்து பாடல்களைப் பெற்று சென்றனர். கோலாட்டப் பாடல்களை புதிதாக இயற்றுவதிலும் அவருக்குத் திறமை இருந்தது. சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட அவரது சொந்தப்பாடல்கள் இப்பிரதேசங் களில் களிகம்பிற்காக பாடப்பட்டு வந்துள்ளன. அவர் சேகரித்திருந்த பாடல்களும் அவரது சொந்தப்பாடல்களும் பெரும்பாலும் அழிந்து போய்விட்டதாகத் தெரிகிறது.

## கிருபை பெற்றவர்

திருநபி வருவார் தாமடி தினமும் அவர் சேவடி
தருவார் தாமடி திருநபிதினம் வருவார் சேவடி
தன் தென்னை ஆள்வார் அடியவருக்கிடையரான
அரசரான முகம்மதென்னும் (திருநபி)

திங்கள் தனிலேயுதித்தாரடி
திருமதினா மாநகர்கரசராய் வந்தாரடி
தேன்மலர்ப்புயற்றும் ராசடி
திமிஸ்க் கரசன் சேயினைப் பெண்ணாக்கிய போஜரடி
தானவன் தனக்குகந்த கோனவன் கிருபை பெற்ற
மாதவர் பரவ வரும் தேனவர்க்கரசே என்னும் (திருநபி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானில் புனலையழைத்தாரடி - ஹபீபெங்கள்
வானின் மதியை அழைத்தாரடி
தானோன் அறுசே கிய சீசரடி
தையலெனும் கதீஜாவை திருமணம் செய்தாரடி
பாவியென்பாவம் பொறுத்து பாலமுதேந்திய நாவினால்
உமைதுதித்தேன் நாயகர் கடத்த நாயகர் முகம்மதெனும்
(திருநபி)

சோமன் அளகுள்ள வடிவாமடி - தோகை
ஆமினா சேயனவே வந்த சுந்தரராகுமடி
சேயனான் உசனார் லெப்பையடி
செய்திடும் மிக்கவிபார்மீதினில் பற்றுமடி
சேய்யன் செய்செந்தமிழின்
சொற்பிழை தனக்கிரங்கும் காசிமின்
குலத்துதித் காரணர் முகம்மதெனும் (திருநபி)

## விதி

விதியை மதிதான் வெல்லுமோ எமன்வராமல்
வினைவந்து உயிரைக் கொல்லும்மோ

கதிரின் சுவர்க்கத்தில் ஆதமுடனே ஹவ்வாவும்
கோதுமை கனியைத்தின்றதும்
பதியில் விடுத்துறை பூமியில் விடுத்ததும்
பாடுபடுத்தி கொடுத்ததும் (விதிய்ை)

ஆபிலைகாபில் கொன்றதும்
யூனுசை மீன் கொண்டலைந்து கடலில் சென்றதும்
நோவால் ஐயுபுநொந்ததும்
தயார் சுல்தானடங்கிக் கைகாலிழந்ததும்
வாளுசுலை மானரசை யிளந்ததும்
மரத்தில் சக்தியா
நபியைப்பிளந்ததும்
காவலிபுறாகீம் நெருப்பில் விழுந்ததும்
கருணைமகன்தன்னை குர்ஆன்புரிந்ததும்
(விதியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூசா தரணி ஆண்டதும்
பிறவூன் வந்து முரணி
வா்தாடிக் கொண்டும் ஆசாவால் படைவென்றதும்
அலிபாத்துஸாகிபு அவரை முதலைதிண்டதும்
ஈசா நபி தம்மை கிணற்றில்லடைத்ததும்
ஓசை தரும் மகுபூது பல்லொன்று உருதுபடை
தன்னில் விழகக் கண்டதும்
தமது தந்தையை உமறு கொன்றதும்
தாம் பெற்றபாலர் தம்மையடித்துக் கொன்றதும்
(விதியை)

உமறயும் அவன் குத்திக் கொண்டதும் சித்தீக்குமகன் உருமனாரை வெட்டிக் கொண்டதும் எமது த்மயனாா் அசனும் உசனுமாம் எடுத்து நெஞ்சைக் குடித்தியிறந்ததும் தமது தகப்பனார் அலியுள்ளாவுமே தறுத ஏசீதுட சொல்லால் மாண்டதும்.
(விதியை)

வம்பன் எசீதவன் தன்னால் வந்த வினைக்கிவாய்
வம்பு பண்ண ஒன்னாது நம்பும் கப்பனைகள் வந்தால்
அந்தவிதிக்கி நாளும் சலிக்கக் கூடாது முன்பில் யிறைய வன்வவுகில் முறைமை தனில் ஒன்றும் குறைகள் வரா தென்றுஜெம்மில் உசன்பல செய்தித்தனையும் தெளிவ தாகவே அறிவில் செப்பினேன். (விதியை)

-ஓ-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவி சீத்தீக்

இவர் கல்பிட்டியை சேர்ந்தவராக இருக்கவேண்டும். இவருடைய தந்தையின் பெயர் அசனா மரைக்கார். இவர் பற்றிய விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

### மாலையணிந்து

பல்லவி

காதிர் முகையதீன் ஆண்டவர்கள்
பதம் பணிந்து வருவோம் - பெண்ணே
எட்டிநடந்து வாடி என் கண்ணே (காதிர்)

அனுபல்லவி

தாராள மாமனச்சிந்தை இருள்விட்டுத்
தங்கிய கோபங்கள் தாபங்களை விட்டு
சாதான பீரொலி சாகிப் அவுலியா
பாக்கியமான பலன் பெறலாமென்று
(காதிர்)

சரணம்

சங்கையாகிய சம்பங்கி எண்ணெய்
தலைக்கிட்டுச் சீப்பிட்டு வாகிடெத்து- இன்னும்
சிங்காரமாய்த் தலைவாந்து கோதிச் சிமிழ்போல
கொண்டைதனை முடித்து- இன்னும்
சித்திர வேலைகள் செய்தெடுத்த
கொண்டைக்குச்சிகள் பொன்னினால் தரித்து- இன்று
சிறக்கவே கொண்டை தாங்கி மாலைகளும்
சிமிழ்போலே 'கொண்டை தனில் தரித்து - நல்ல

கல்கட்டுத் தலுக்கத்து காதினில் தூக்கியே
காதுப்பு கொப்புத் துலிக்கியா தூக்கியே
அலுக்கத்து அரசலை வாவிலி தூக்கியே
அலங்கிர்தமான மணிகளும் தூக்கியே

மின்னுதே - அழகுன்னுதே - சுடர்தோனுதே
வெகுதுரிதமுடனே (காதிர்)
அட்டியலுக்கட்டு பின்கொக்கிதாலி
கடுகுமணிகளும் தரித்து - நல்ல
கண்டங் காறைகளும் முளகு பின்னச்சவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனமணிகளும் தரித்து - இன்னும்
அழகாய் முத்துபவளம் பச்சை கொருத்த
மாணிக்க மாலையும் தரித்து - இன்னும்
வண்டிபருத்த வயிர மணிமுயல்
வக்கு மணிகளும் தரித்து - இன்னும்

உச்சிர்தமான புலிநகர்கோர்வையும்
முன்னெருஞ்சி மாமரகத மாலையும்
முத்துப் பதித்த சரப்பளி மோகன
மாலை அணி விதவிதமாகவே
தரிப்போம் - சற்றே இருப்போம் மனங்களிப்போம்
இனி எழுந்து நடப்போம் (காதிர்)

பத்து விரலும் பசுந்தங்கத்தால் கணையாழி
மோதிரங்கள் தரித்து - இன்னும்
கைக்கட்டுப் பொன்மணி கடயம் முத்துச்சரி
காப்புடன் கங்கணம் தரித்து - இன்னும்
பாடகம் தண்டை சிலம்பு கொலுசு
சலங்கைகளானதும் தரித்து - இன்னும்
முந்தாங்கி பீலி எரிசி கூடுங்கொடி
மீன்குஞ்சியானதும் தரித்து - நல்ல

பஞ்சவர்ணப் பட்டுச் சேலை உடுத்தியே
பசுமையான பட்டுரவிக்கையும் பூட்டியே
பல்லினில் இடும் காவியதைத் தீட்டியே
கண்ணில் சிறுமா களிப்புடன் தீட்டியே
இருப்போம் - பன்னீரெடுப்போம் - மேலில் தெளிப்போம் இனி
எழுந்து நடப்போம் (காதிர்)

மு.கா. வீடு முன்னாலே - அதை
தாண்டி நடந்திடத் தோணுது
நாலுமுச்சந்தி புளியுமுன்னாலே - அதை
விட்டுக் கடந்து நடந்திடத் தோணுது
கொத்துவாப்பள்ளி முன்னாலே - அந்தப்
பள்ளியில் கொண்டுபோய் நேர்த்திகளான
கடனைக் கொடுத்ததினாலே - வெகு

ஆதரவாய் அன்புவைத்தே முசீபத்து
மூதேவியால் முட்டு ஏதும் வராமலே
தாராளமாகத் துரத்தி அடிக்கும்
குதுபொலி பேரினில் நேர்த்திகளானதைக் கொடுப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் தொலைப்போம் - விட்டு நடப்போம்
ஒரு பாத்திகா ஓதுவோம் (காதீர்)

சாதிக் கொழுந்தாகிய ஆண்டவர்
பள்ளியை விட்டுப்பின் தாண்டி - நல்ல
மாரிகால மழைபெய்தது போலவே
வாங்கி வந்தோம் வரம் வேண்டி - பெரும்
வீதிகளெல்லாம் கடந்து நடந்திட
தோணிடும் வீடெல்லாம் தாண்டி - சொந்த
வீட்டுக்குச் சென்று யிறைவன் ஆதியே
புகழ்ந்து கொள்வோம் இனி வேண்டி

செம்மையாய்க் கட்டளைப்பெற்ற நொத்தாரிஸ்
அசனா மரைக்காயர் புத்திரனாகிய
லெச்சிமியால் வந்து சிந்தையில் தங்கும்
முகம்மது சித்தீக்கு சொல்பிழை வராமல்
காரும் 'அருள்தாரும் - முகம்பாரும்
ஒரு குற்றம் வராமலே (காதீர்)

-ை-

## அ.முகம்மது இப்றாகீம்

அ.மு.இப்றாகீம் கல்பிட்டி அ. மு. மதார் மரைக்காரின் தந்தையாவார். (பிறப்பு- 1900) இவர் பல களிகம்பு பாடல்களை இயற்றியுள்ளார். கீழ்வரும் பாடல் ஒன்றை நம் கைவசம் உள்ளது.

### மஸ்தான் சாகிபொலி

பல்லவி

மஸ்தான் சாகிபொலி பாதம்
காணலாம் வஞ்சியே றெம்பவா
கண்ணே மனம் தெம்பாய்
நடந்துவா பெண்ணே

அனுபல்லவி

மஸ்தான் சாகிபொலி பாதம் காணலாம்
வஞ்சியரன்பாய் நடந்து துடர்ந்துவா
விஸ்தாரமா மௌலூது ஓதி வருகலாம் மானே
மகிழ்ந்து துடர்ந்துவா தேனே (மஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

வீட்டைத்துயர்ந்து வெளியினில் சென்றுயாம்
வேடிக்கையாகவே கூடி - நல்ல
நாட்ட மிகுந்தொலி நாயகர் நிண்ணயம்
நாமிதிற் காணலாம் நாடி - நல்ல
தேட்டமுடனே சென்றெல்லோரும்
தெருக்கள் அலங்கிர்தம் தேடி- நல்ல
காட்டுபா ஒலி பாதம் காணவே
கன்னி கருக நடந்துவா சென்டோடி- நல்ல
தேட்டமுடனே சென்டே வழி
செல்குவோம் தேன்மொழியே
தெற்கு வீதியது கண்டாய்
தேசம் புகழ் ராசர் வீதியதில் நின்று செல்வர்
கோசாலி கிட்டங்கிக் கப்பாலே சென்றோம் (மஸ்)

கொஞ்சியே கூடி நடந்து வந்தோமடி
கோதையரே பள்ளிசீராய் - அதில்
ஐந்தொகுத்தும் தொழும் அன்பு மிகுந்த
அனேக முஸ்லீம்கள் பாராய் - அடி
வஞ்சியே சன்னதி வாயல் முன்னே -நின்று
வந்தனம் செய்குவோம் பாராய்
வந்து இணங்கி அவுலியா பள்ளி
அனுக்கிரகம் செய்வோம் நேராய் - நல்ல
நேர்மையாய் நேத்தி செய் பாத்திஹா ஓதியே
நீதி அலாவுத்தீன் நின்பாதம் போற்றியே
நேத்தியளித்திடும் நேரிழையே - நத்தி
நேராய் இது வழி வாராயடி பெண்ணே (மஸ்)

கூடியே சீக்கிரம் பாதை நடந்து வா
கூந்தல் அவங்கிர்த மானே
கோடான கோடிப் பதார்த்தங்கள் விக்கும்
கிலக்கறி பங்களா தானே
மோடியதாக இருக்கும் கடையதை
மோகமாய் பாரடி தேனே - திவ்ய
வாடை சவ்வாது கந்தம் பன்னீர் கஸ்தூரி
வாங்கும் மணிக்கடை தானே - நல்ல
வேடிக்கையாக விதம்விதம் காணுது
வேப்பமரத்தடி சோலை முன்தோணுது
தேடிய வாழை கனிவகை தானிது -தேன்மொழியே
செல்லவாராயோடி பெண்மயிலே (மஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசினியோர்கள் புகழ்ந்திடும் கனமிகு
காசீன் முதலாளி வீட்டை - பிற
காசத்திலே நின்று கலங்காமலே
நிண்டு மேல் மெத்தை மேல் கண்பாராட்டை
வெகு வாசல்களும் மற்றவேலைகளும்
வைத்தெழுதினதால் ஒரு கோட்டை - நல்ல
நிச்சயமாகவே கோட்டு முன்தோணுது
நீதத்தைப்பார் படும் பாட்டை -நல்ல
தீராப்பேய் பில்லி வஞ்சனை சூனியம்
மற்றப் பிணியெல்லாம் பற்றிப் பறந்திடும்
தாழமான அவுலியா பாதத்தில் தங்கி
மௌலூது பொங்கி வருகலாம் (மஸ்)

## குறிப்புக்கள்

அனஸ் எம்.எஸ் எம். (1991) **வரகவி செய்கு அலாவுத்தீன்.** வெளியீடு: முஸ்லிம்கள்சார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.

........ (1994) **ஷெய்கு இஸ்மாயில் புலவர் ஒரு பயன்பாட்டுப் பார்வை.** வெளியீடு இளம் முஸ்லிம் பட்டதாரிகள் சங்கம், புத்தளம்.

......... **களிகம்புப்பாடல் திரட்டு** (பிரசரிக்கப்படாதது).

மயில்வாகனன், அ. வி (1994) **புலவர் ஆற்றுப் படை.** கமலாம்பிகா அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்.

செய்கு அலாவுத்தீன். நா. (1928) **நவவண்ணக் கீர்த்தனை.** *ஹிஜாஸிய்யா, கொழும்பு.*

எம். எம். லெப்பை (1938) **இஸ்லாத்தின் இறுதிநபி (ஸல்).** வினியோகஸ்தர், கா.மு முகம்மது நெய்னா கோபாலப்பட்டணம்.

இந்நூலில் உள்ள பெரும்பாலான பாடல்கள் அப்துல்மஜீது புலவருடையது உட்பட வாய்வழிமூலமாக பெற்று எழுதப்பட்டவை அதனால் இப்பாடல்வரிகளில் திரிபுகளும் தவறுகளும் இருப்பதற்கு இடம் உண்டு. இனிவரும் பதிப்புக்களில் திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 955-8806-06-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org